217

உ

கணபதி துணை.

# சூடாமணி நிகண்டு

முதலிரண்டுதொகுதிகளின்

## பதப்பொருள்விளக்கம்.

இது

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்

அ. குமாரசுவாமிப்புலவரால்

இயற்றி,

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

பரிதாபி ஞு சித்திரை மீ.

(Copyright Registered.)

உ

# முதலாவது
# தெய்வப்பெயர்த்தொகுதி.

## அருகன்பேயர்.

௧. அருகன் - பூசிக்கத்தக்கவன், மதிக்கத்தக்கவன். அநகன் - பாவமில்லாதவன், துக்கமில்லாதவன், கலக்கமில்லாதவன். (அந் - இன்மை. அகம் - பாவம், துக்கம், கலக்கம்.) * எண்குணன் - எட்டுக்குணங்களுடையவன். நிச்சிந்தன் - சிந்தித்தற்கரியவன். அறவாழிவேந்தன் - அறச்சக்கரத்தலைவன். வாமன் - வணங்கப்படத்தக்கவன். சினன் - வினைகளைவென்றவன், பூசிக்கத்தக்கவன். வரன் - சிறந்தவன், தலைவன். உறுவன் - யாவரினுமிக்கவன். சாந்தன் - பொறுமையுடையவன், மகிழ்ச்சியுடையவன். சினேந்திரன் - † எண்வகைக் கன்மங்களையும் வென்றவன். முனைவன் - முதல்வன். மாசேனன் - பெரியசேனையுடையவன். தேவன் - பிரகாசமுடையவன், மகிழ்ச்சியுடையவன். மூவுலகுணர்ந்தமூர்த்தி - மூன்றுலகங்களாலு மறியப்பட்ட கடவுள். புனிதன் - சுத்தமுடையவன், புதியவன். வென்றோன் - வினைகளை வென்றவன். விராகன் - இச்சையில்லாதவன். பூமிசைநடந்தோன் - தாமரைப்பூவை வாகனமாகக் கொண்டுசென்றவன். போதன் - அறிவுடையவன்.

௨. பண்ணவன் - தகுதியுடையவன். கமலவூர்தி - தாமரைப்பூவாகிய வாகனமுடையவன். பரமேட்டி - மேலானவிடத்தில் இருப்பவன். காதிவென்றோன் - ‡ உபாதிகளைவென்றவன். புண்ணியன் - நற்செயலுடையவன். புலவன் - எல்லார்க்குமறிவாயுள்ளவன். புத்தன் - அறிவுடையவன். பூரணன் - நிறைவுடையோன். பொன்னெயிற்கோன் - (உதயதரம் பிரீதிதரம் கல்யாணதரம் என்னும்) பொன்மதில்களுக்குத் தலைவன். விண்ணவன் - சுவர்க்கவாசி. விமலன் - மலமில்லாதவன். வீரன் - முடிவில்லாத வீரியமுடையவன். விநாயகன் - உயிர்களுக்கு உறுதிபோதிப்பவன். வீதசோகன் - சோகமில்லாதவன். அண்ணல் - பெருமையுடையவன். மத

---

* எண்குணங்களாவன: முடிவிலாவறிவு, முடிவிலாச்காட்சி, முடிவிலாவீரியம், முடிவிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழிவின்மை என்பன.

† எண்வகைக் கன்மங்களாவன: ஞானுவரணீயம், தரிசனுவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்பன.

‡ உபாதிகள் ஞானுவரணீயம் முதலியன.

னைவென்றோன் - மன்மதனை வென்றவன். அருட்கொடிவேந்தன் - அருளாகிய கொடியையுடைய தலைவன். ஆசான் - குருமூர்த்தி.

௩. முத்தன் - காமாதிகளால் விடப்பட்டவன், பாசங்களால் விடப்பட்டவன். மாமுனி - விருப்பு வெறுப்பு முதலியன நீங்கினவர்களுள்ளே மிக்கவன். கருத்தன் - உலகத்தைப் படைத்தவன். முக்குடைச்செல்வன் - மூன்று குடைகளாகிய சிறப்புடையவன். முன்னோன் - எவர்க்கும் முன்னுள்ளவன். சித்தன் - செயற்பாலனவற்றைச் செய்து முடித்தவன், எண்வகைச்சித்திகளையுமுண்டாக்கினவன். எண்சிறப்புமுள்ளோன் - * எட்டாகிய சிறப்புகளுடையவன். திகம்பரன் - திக்கினை வஸ்திரமாகவுடையவன், வஸ்திரமில்லாதவன். கொல்லாவேதன் - கொல்லாமை போதிக்கும் வேதமுடையவன், நித்தன் - பிறப்பிறப்பற்றவன். நின்மலன் - மலமில்லாதவன். நின்னுமன் - நாமமின்மையுடையவன். நிராயுதன்-ஆயுதம் பிடியாதவன். நேமிநாதன்-அருளாழிக்குத்தலைவன். அத்தன்-அகிலகாரணமானவன், மெய்ப்பொருளாயுள்ளவன். ஆனந்தன் - இன்பமுடையவன். சோதி-ஒளியாகி நிற்பவன். அரியணைச்செல்வன்-சிங்காசனமாகிய சிறப்புடையவன். ஆதி-பிரபஞ்சகாரணன்.

௪. ஆத்தன் - சத்தியமுடையவன், தக்கவன். குற்றங்களில்லான் - (பசிமுதலிய) குற்றங்களில்லாதவன். அசோகமர்கடவுள் - அசோகமரநீழலிலிருக்கும் கடவுள். ஆதன் - முதன்மையுடையவன். சாத்தன் - துட்டர்களைத் தண்டிப்போன். வேதாந்தன் - வேதத்தின் முடிந்தபொருளாயுள்ளவன். நாதன் - தலைவன். சமி - அந்தக்கரணங்களையடக்கினவன், (விருப்பு வெறுப்பிற்) சமமுடையோன். அநாமயன்—நோயில்லாதவன். சுயம்பு - தானேதோன்றினவன். நீத்தவன் - பற்றினை நீக்கினவன். பிதா - உயிர்கட்குத் தந்தை. விதாதா—சிருட்டிப்பவன். நிரம்பரன் - வஸ்திரமில்லாதவன். அநந்தஞானி - முடிவில்லாத ஞானமுடையவன். தீர்த்தன் - நியமிப்பவன், மேன்மையுடையவன். மால்-பெருமையுடையவன். பகவன் - திரிகாலஞானமுடையவன். சாமி - எல்லாமுடையவன். சீபதி - திருவுக்கு நாயகன். சீமான் - † ஸ்ரீயையுடையவன். செய்யோன் - நேர்மையுடையவன்.

---

* எட்டுச்சிறப்புக்களுமிவை என்பதைச் "சுடர்மண்டலஞ் சுரதுந்துபி தெய்வத்துவனி சிங்கப்—பிடர்மண்டல வணைபிண்டிவெண்சா மரைபெய்ம் மலரி—னடர்மண்டல மழையம்பொற் குடைமும்மை யாமடியோ—மிடர்மண்டலங் கெடுப்பாற்கிமை யோர்செயுமெண் சிறப்பே" என்னுந் திருநூற்றந்தாதியானுணர்க.

† ஸ்ரீ - அலங்காரம், செல்வம், ஒளி, புத்தி.

௫. நிருமலன் - மலமில்லாதவன். வரதன் - வரங்கொடுப்பவன். சாது - நேர்மையுடையவன், காரியங்களைச் செய்துமுடிப்போன், நல்லொழுக்கமுடையவன். நிரஞ்சனன் - குற்றமில்லாதவன். விறலோன் - வலிமையுடையவன். யோகி - யோகமுடையவன். தருமராசன் - தருமங்களுக்குத் தலைவன். யுகாதி - யுகமுதல்வன். சதுர்முகன் - நான்குமுகங்களுடையவன். சாதரூபி - சித்திரமானரூபமுடையவன். திருமறுமார்பன் - திரு என்னும் மறுவமைந்த மார்புடையவன். சிவகதிக்கிறை - வீட்டுலகுக்கு நாயகன்.

## சிவன்பெயர்.

௬. சிவன் - சுகத்தோடு கூடினவன், விகாரமில்லாதவன், நல்லோருடைய மனந் தன்னிடத்திலே கிடக்கப்படுபவன், நல்லோர் மனத்திற் கிடப்பவன், நன்மையுடையவன், நன்மைகொடுப்பவன், ஒளியுடையவன், முத்திகொடுப்பவன். சங்கரன்-சுகஞ்செய்பவன். இறையோன் - எங்குந் தங்குதலுடையவன். சம்பு - சுகஞ்செய்பவன். சதாசிவன் - எப்பொழுதும் நன்மைசெய்பவன். பேயோடாடி - பேயோடு ஆடுபவன். அரவணிந்தமூர்த்தி - பாம்பணிந்த வடிவமுடையவன். புராந்தகன் - முப்புரங்களையழித்தவன். பூதநாதன் - பூதகணங்களுக்குத் தலைவன், உயிர்களுக்குத் தலைவன். கங்கைவேணியன் - கங்கைதரித்த சடையுடையவன். கங்காளன் - முழுவெலும்பு தரித்தவன். கடுக்கையங்கண்ணிசூடி - கொன்றைமாலையணிந்தவன். மங்கையோர்பாகன்—தேவியை ஒருபாகத்திலுடையவன். முன்னோன் - எல்லார்க்கும் முன்னானவன். மகேச்சுரன் - மேலாகிய ஐசுவரியமுடையவன், ஈசுவரருள்ளே மிக்கோன். வாமதேவன் - மேலானதேவன், இடப்பக்கத்திற் றேவியையுடையவன்.

௭. நீலகண்டன் - கரிய கழுத்துடையவன். மாதேவன் - மேலான தேவன், பெரிய ஒளிமயமானவன். நிருமலன் - மலமில்லாதவன். குன்றவில்லி - மலையாகிய வில்லையுடையவன். சூலபாணியன் - சூலந்தரித்த கையுடையவன். ஈசானன் - மகாசாமர்த்தியமுடையவன். பசுபதி - ஆன்மாக்களைக் காப்பவன். சுடலையாடி - சுடலையிலாடுதலுடையவன். காலகாலன் - யமனுக்கும் முடிவுசெய்தவன். கபாலி - தலையோட்டினைத்தரித்தவன். உருத்திரன்-பகைவரையழுவிப்போன், துக்கத்தினை நீக்குவோன், தீங்கினை நீக்குவோன், சமுசாரபந்தத்தினின்றும் உயிர்களை விடுவிப்போன், சப்தமயப்பிரபஞ்சத்தினைத் தன்வசஞ்செய்தவன், எல்லாச்சொற்களாலுஞ் சொல்லப்படுவோன், பிரமஞானத்தைப் போதிப்பவன், மௌனசமாதியைப் போதிப்பவன், பிரமவித்தையினால் உயிர்களுடைய

அறியாமையைக் கரைப்பவன், ஆன்மாக்களால் அழுந்தடையப்படு பவன், தமோகுணத்தைத் தன்வசப்படுத்திக்கொண்டவன், உயிர்க ளிடத்துள்ள அஞ்ஞானநிமித்தந் துயருறுவோன், எவ்வுலகிற்கும் அச்சங்கொடுப்பவன். கைலையாளி - கைலாசமலையில் வசிப்பவன். ஆலமர்கடவுள் - கல்லாலின்புடையிருந்த கடவுள். நித்தன் - பிறப் பிறப்பற்றவன். ஐம்முகன் - ஈசானம் முதலிய ஐந்துமுகங்களுடை யவன். பரசுபாணி - மழுவாயுதந்தரித்த கையுடையவன்.

அ. அந்திவண்ணன் - செந்நிறமுடையவன். முக்கண்ணன் - மூன்றுகண்களுடையவன். அழலாடி - அழலிலாடுதலுடையவன். பாண்டரங்கன் - பாண்டரங்கமென்னுங் கூத்துடையவன். சந்திர சேகரன் - சந்திரனைச் சிரபூஷணமாகவுடையவன். ஆனந்தன் - பெருமகிழ்ச்சியுடையவன். அநந்தன் - அழிவில்லாதவன், அளவி லடங்காதவன். ஆதி - உற்பத்திக்குக் காரணன். தந்தியுரியோன்— யானைத்தோலுடையவன். நம்பன்-விரும்பப்படுபவன். தற்பரன்- ஆன்மாவுக்கு மேலானவன். நீறணிந்தோன் - விபூதியணிபவன் — நந்தி - மகிழ்ச்சியுடையவன். ஈச்சுரன் - மகாமகிமையுடையவன். ஏறூர்ந்தோன் - இடபவாகனம் செலுத்துபவன். நக்கன்-சங்கார கருத்தன், நிருவாணி. ஞானமூர்த்தி - அறிவுருவாயுள்ளவன்.

கூ. வரன் - மேலானவன். மறைமுதலி - வேதத்திற்கு முதல் வன். ஈசன் - எல்லாமேன்மையுமுடையவன். மானிடமேந்தி — மானை இடப்பக்கத்திலேந்தினவன். சோதி - ஒளிவடிவாயுள்ள வன். பிரமன்மாற்கரியோன் - பிரமவிட்டுணுக்களாலறியப்படாத வன். தாணு-அசைவில்லாதவன், ஊழியிலும்நிலைபெறுபவன். பிஞ் சகன் - தலைக்கோலமுடையவன், சங்காரகர்த்தன். பினாகபாணி - பினாகமென்னும் வில்லுத்தரித்த கையுடையவன். பரமன் - மகி மையுடையவன். எண்டோளன் - எட்டுப்புயமுடையவன். பர்க் கன் - ஒளியுடையவன். பவன் - எல்லாவற்றையும் பிறப்பிப்பவன். யோகி - யோகமுடையவன். பகவான் - மகிமை, வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறுமுடையவன். ஏகன் - முக்கியமுடையவன். அரன் - முடிவில் எல்லாவற்றையுமழிப்ப வன், மலத்தினை அழிப்பவன், உயிர்களை உயர்ந்தநிலையிற் போகச் செய்வோன். உமாபதி - பார்வதிதேவிக்கு நாயகன்.

## பலதேவன்பெயர்.

க0. பலதேவன் - சாமர்த்தியத்தால் விளங்குவோன். ஓர்கு ண்டலன் - ஒற்றைக் குண்டலமுடையவன். இரேவதிகொண்கன்— இரேவதிதேவிக்கு நாயகன். முசலி—உலக்கைப்படையுடையவன்.

வெள்ளை - வெண்ணிறமுடையவன். நீலாம்பரன் - கரியவஸ்திரமுடையவன். அநந்தன்-சேடாவதாரமாயுள்ளவன். அலப்படைகொண்டோன் - கலப்பையை ஆயுதமாகவுடையன். அச்சுதன்முன்னர் வந்தோன் - கிருஷ்ணனுக்கு முன் பிறந்தவன். பலபத்திரன்—சாமர்த்தியத்தினாலே மிக்கவன். காமபாலன் - மன்மதனைக்காப்பவன். பனந்தாமன் - பனைவடிவமான கொடியுடையவன்.

## அரியின்பெயர்.

கக. அரி - அடியார்துயர் களைபவன், பகைவரையழிப்பவன். மாதவன் - இலக்குமிக்கு நாயகன், மதுவித்தை என்னும் வேதபாகத்தினாற் புகழப்பட்டவன், மௌநதியானயோகங்களுடையவன், மதுவென்பவன்மரபிற் பிறந்தவன். மாயன் - மாயமுடையவன், அதிசயமான செயலுடையவன், கருநிறமுடையவன். வாமனன் - குறள்வடிவுடையவன். வாசுதேவன்—வசுதேவனுடைய புத்திரன். சீதரன்-இலக்குமியை மார்பிலே தரித்தவன். நந்தகோபன்மகன் - நந்தனாகிய இடையனுக்கு மகன். உவணகேதனன்-கருடக்கொடியுடையவன். பதுமநாபன்-நாபியிற்றாமரைப்பூவுடையவன். கேசவன்-அழகிய மயிருடையவன், * கேசியென்னுமசுரனைக் கொன்றவன். பஞ்சவர்க்குத்தூதன் - (தருமன்முதலிய) ஐவர்க்குந் தூதுசென்றவன். சார்ங்கபாணி-சார்ங்கமென்னும் வில்லைக் கையிலுடையவன். சங்கமேந்தி-(பாஞ்சசன்னியமென்னும்)சங்கினையேந்தினவன்.

கஉ. கொண்டல்வண்ணன்-கருநிறமுடையவன். காகுத்தன்-† ககுத்தனுடைய மரபிற் பிறந்தவன். கோவிந்தன் - பசுக்களையடைந்தவன், சலத்திலே யமிழ்ந்திய பூமியைப் பன்றியாயடைந்தவன். அச்சுதன் - அழிவில்லாதவன், தன்னுடையதானத்தினின்றும் பெயராதோன். மால் - பெருமையுடையவன். விண்டு-வியாபகமுடையவன். வேலையிற்றுயின்றோன் - பாற்கடலில் நித்திரை செய்பவன். உந்திபூத்தோன் - உந்தியிலே தாமரைப்பூவுடையவன். துழாய்மௌலி - முடியிலே துளவமாலையையுடையவன். ஆதிவராகன் - முதன்மையான பன்றியவதாரமுடையவன். வைகுண்டநாதன் - வைகுண்டத்தலைவன். முண்டகாசனைகேள்வன்-இலக்குமிக்கு நாயகன். தாமோதரன் - கயிற்றினாற்கட்டப்பட்ட வயிற்றினையுடையவன், வயிற்றிலே துளவமாலையுடையவன். ‡ முராரி-முராசுரனுக்குப் பகைவன். நேமி - நிமிமரபிற்பிறந்தவன், நடத்துவோன்.

---

* கேசி-கஞ்சனாலனுப்பப்பட்டுக் குதிரைவடிவாய் வந்த ஓரசுரன்.

† ககுத்தன் - சூரியவமிசத்துள்ள ஓரரசன்.

‡ முரன் - நரகாசுரனுடைய தமையன்.

கங: வலவன் - (அருச்சுனனுக்குத்) தேர்ப்பாகனானவன். தேவகிமைந்தன் - தேவகியென்பவளுடைய புதல்வன். வனமாலி - துளசிமாலை அணிபவன். படியிடந்தோன் - பூமியைக்கிழித்தவன். சலசலோசனன் - தாமரைப்பூப்போன்ற கண்ணுடையவன். அனந்தசயனன் - சேடனாகிய படுக்கையுடையவன். பீதாம்பரன் - பொன்வஸ்திரமுடையவன். உலகளந்தருள்வோன் - உலகத்தையளந்தவன். * பஞ்சாயுதன் - ஐந்தாகிய படையுடையவன். உலகுண்டபெம்மான் - பூமியையுண்டபெருமான். அலகைமுலையோடாவியருந்தினோன் - பூதனையென்னும் பசாசினை முலைப்பாலோடுண்டவன். நாரசிங்கன் - மனுடவடிவும் சிங்கவடிவுமான உருவமுடையவன்.

கச. அரவணைச்செல்வன் - பாம்பணையிற் கிடப்பவன். கண்ணன் - கரியவன், எல்லாஞ்செய்பவன். அறிதுயிலமர்ந்தமூர்த்தி - அறியும் (யோக) நித்திரைசெய்பவன். பிரமனைப்பெற்றதாதை - பிரமாவைப்பெற்றவன். † பின்னைகேள்வன் - நப்பின்னை என்பவளுக்கு நாயகன், இலக்குமிக்கு நாயகன். முகுந்தன் - மோகங்கொடுப்பவன். கரியவன் - கருநிறமுடையவன். நெடியோன் - நீண்டவடிவத்தையுடையவன். காவற்கடவுள் - காத்தற்றொழிற்குக் கடவுள். நாரணன் - சலத்திலே வசிப்பவன், நரசன்மயடையவ்ன்.

## பிரமன்பெயர்.

கரு. பிரமன் - வேதமோதுவோன். மேதினிபடைத்தோன் - உலகினைச்சிருட்டித்தவன். பிதாமகன் - தந்தையாயுள்ளார்க்குந் தந்தை. பிதா - உலகிற்குத் தந்தை. விதாதா - உலகைச் சிருட்டித்தவன். வரன் - (தேவர்களுட்) சிரேட்டன். அயன் - விட்டுணுவிடத்திற் பிறந்தவன். மலரோன் - தாமரைப்பூவிலிருப்பவன். மண்பொதுத்தந்தை - பூமிக்குப் பொதுவான பிதா. வேதா - சிருட்டிப்பவன். இரணியகருப்பன் - பொன்மயமான கருப்பமுடையவன், கருவிற் பொன்னுடையவன். போதன் - அறிவுடையவன். மாலுந்திவந்தோன் - விட்டுணுவின் உந்தியினின்றுமுதித்தவன். குரவன் - பெருமையுடையவன். ஓதிமமுயர்த்தகொடியினன் - அன்னக்கொடியுடையவன். அன்னவூர்தி - அன்னவாகனமுடையவன்.

கசு. இறை - சர்வலோகத்திற்குந் தலைவன். ‡ சதானந்தன் - வெகுமகிழ்ச்சியுடையவன். எண்கணன் - எட்டுக் கண்களுடைய

---

* பஞ்சாயுதங்களாவன: வில், வாள், சங்கு, சக்கரம், தண்டு என்பன.

† நப்பின்னை - மிதிலையரசன்மகள். ‡ சதம் - வெகு.

வன். விதி - எல்லாஞ் சிருட்டிப்பவன். சுயம்பு - தானேதோன்றினவன். மறையவன் - வேதங்களையோதுவோன். அநந்தன் - முடிவில்லாதவன். ஞானி - அறிவுடையவன். மான்மகன் - விட்டுணுவின் மகன். வாணிகேள்வன் - நாமகளுக்குநாயகன். பகவன் - ஐசுவரியம் முதலிய ஆறுமுடையவன். வானோர்முதுவன் - தேவருள்ளே மிக்கவன். நான்முகன்-நான்குமுகங்களுடையவன். விரிஞ்சன் - சிருட்டிப்பவன், அன்னவாகனமுடையவன். கமலயோனி - விட்டுணுவின் உந்திக்கமலத்தைப் பிறப்பிடமாகவுடையவன்.

## புத்தன்பெயர்.

கஎ. புத்தன் - (எல்லாவற்றையும் கணபங்கமென்று) நினைப்பவன். தருமராசன் - கொல்லாமை வாய்மை முதலியதருமங்களுக்குத்தலைவன். முனீந்திரன் - முனிவருள்ளேமிக்கவன். சினன் - (சம்சாரத்தை) வென்றவன். ததாகதன்-நல்லறிவுடையவன். ஆதி-முதல்வன். தேவன்-ஒளியுடையவன். சாக்கியன்-தேக்கமரச்சோலையிலிருப்பவன், சாக்கியமரபிற் பிறந்தவன். சைனன்-உபாசகன். விநாயகன் - நன்மைபோதிப்பவன், மேலானவன். சினந்தவிர்ந்தோன் - கோபமில்லாதவன். அரசுநீழலிலிருந்தோன் - அரசமரநீழலில் இருந்தவன். வரன் - மேலானவன். பகவன் - மேன்மை முதலிய ஆறுமுடைவன், மேலானவன். செல்வன் - சிறப்புடையவன்.

கஅ. அண்ணல் - பெருமையுடையவன். மாயாதேவிசுதன் - மாயாதேவியுடையமகன். அகளங்கமூர்த்தி - குற்றமில்லாத வடிவமுடையவன். கலைகட்கெல்லா நாதன் - கலைகளுக்குத்தலைவன். முக்குற்றமில்லோன்-மூன்று குற்றமுமில்லாதவன். எண்ணில்கண்ணுடையோன் - பலகண்களுடையவன். வாமன்-அழகுடையவன். புண்ணியத்தின்மூர்த்தி - புண்ணியவடிவமுடையவன். புண்ணியமுதல்வன் - புண்ணியத்துக்குத்தலைவன். சாந்தன் - பொறுமையுடையோன். பூமிசைநடந்தோன் - பூவின்மேற்சென்றவன்.

## இந்திரன்பெயர்.

ககூ. இந்திரன் - பகைவரைப்போக்குவோன், சகல நன்மை தீமைகளையுங்காண்பவன், நெல்லுமுதலிய தானியங்களைக் கொடுப்பவன், பெருமகிமையுடையவன். மேகவாகனன்-மேகத்தினை வாகனமாகவுடையவன். வேள்விக்குவேந்தன் - யாகங்களுக்குத்தலைவன். விண்முழுதுமாளி - விண்ணுலகமுழுதுமாள்பவன். பாகசாதனன் - *பாகனென்னுமசுரனைக் கொன்றவன். வச்சிரபாணி-வச்

* பாகன் - விருத்திராசுரனுடைய தம்பி.

சிராயுதத்தைக் கையிலுடையவன். கோபதி-விண்ணுலகத்துக்குத் தலைவன். நாகநகர்க்குநாதன்-தேவலோகத்துக்குத் தலைவன். நான் மருப்பியானையூர்தி - அயிராவதயானையை வாகனமாக ஊர்பவன். போகி - போகங்களுடையவன். வாசவன் - செல்வமுடையவன். வேந்தன் - ஒளியுடையவன். புரந்தரன் - பகைவருடம்பைப் பிளப்பவன். புலவன் - அறிஞன். சக்கிரன் - துட்டர்களை வெல்வதில் வல்லவன்.

உ0. மருதநிலத்துவேந்தன் - மருதநிலத்தலைவன். மருத்துவவன் - தேவர்களையுடையவன். வானோர்கோமான் - தேவருக்கரசன். புருகூதன் - யாகத்தில் அழைக்கப்படுபவன். சசிமணாளன் - இந்திராணிக்குநாயகன். புரோகிதன் - தேவகாரியங்களில் முன்வைக்கப்படுபவன். கௌசிகன்-குசிகர்மரபிலுள்ளவன், கூகைவடிவங்கொண்டவன். கரியவன் - கருநிறமுடையவன். சுஞ்சீரன் - நல்ல சேனைகளுடையவன். ஆகண்டலன் - சத்துருக்களைக் கண்டிப்பவன். வலாரி - வலாசுரனுக்குப் பகைவன். அரி - சத்துருக்களைச் சங்கரிப்பவன். சதக்கிரது - நூறுயாகங்களுடையவன். ஆயிரங்கண்ணன் - ஆயிரங் கண்களுடையவன்.

## விநாயகன்பெயர்.

உக. விநாயகன் - தன்னின் மேலான நாயகனில்லாதவன், துட்டர்களையும் இடையூறுகளையுங் கண்டிப்போன். அங்குசபாசமேந்தி - அங்குசத்தையும் பாசத்தையுந் தரித்தவன். அம்பிகைதனயன் - உமையின்மகன். முன்னோன் - யாவராலும் முன்னாகக் கொள்ளப்படுபவன். ஐங்கரன் ஐந்து கைகளுடையவன். மூத்தோன் - மூத்தபிள்ளை. ஒற்றைமருப்பினன் - ஒருகொம்புடையவன். ஏரம்பன் - உருத்திரனுடைய சமீபத்திலிருப்பவன், (அடியாரை) வளர்விப்பவன். கங்கைபெற்றோன் - கங்கையைத் தரித்தவன், கங்கையாற் பெறப்பட்டவன். முக்கண்ணன் - மூன்றுகண்களுடையவன். கணபதி - கணங்களுக்குத் தலைவன். ஈசன்மைந்தன் - சிவனுக்கு மகன். கயமுகன் - யானைமுகம்போன்ற முகமுடையவன். ஆகுவாகனன் - பெருச்சாளிவாகனமுடையவன்.

## வீரபத்திரன்பெயர்.

உஉ. வீரபத்திரன்-வீரத்தினாலே மிக்கவன். உக்கிரன் - கோபமுடையவன். அழற்கண்வந்தோன் - சிவனுடைய நெற்றிக்கண்ணினின்றும் வந்தவன். உமைமகன் - உமையின் புத்திரன். சிம்புளூர்ந்தோன் - எண்காற்பறவைவடிவங் கொண்டவன். முக்கணன் - மூன்றுகண்களுடையவன். சடையோன்-சடையுடையவன். யானை

முகவனுக்கிளையோன் - விநாயகருக்குத் தம்பி. வில்லி - வில்லுடையவன். செக்கர்வானிறத்தன் - செக்கர்வானம்போலும் நிறமுடையவன். குரோதன் - கோபமுடையவன். சிறுவிதிமகஞ்சிதைத்தோன் - தக்கனுடைய யாகம் அழித்தவன். பத்திரைக்குக்கேள்வன் — பத்திரைக்கு நாயகன்.

## கந்தன்பெயர்.

உ௩. கந்தன் - சேர்க்கப்பட்டவன், சத்துருக்களையழிப்பவன். முருகன் - * தெய்வத்தன்மையுடையவன், இளமையுடையவன். வேள் - விரும்பப்படுபவன். சாமி - எல்லாமுடையவன். ஆறுமுகன் - ஆறுமுகங்களுடையவன். குகன் - காப்பவன், இரகசியமானவன், தன்சேனைகளைக் காப்பவன். குழகன் - அழகன். மாயோன்மருகன் - விட்டுணுவுக்கு மருகன். சேய் - செந்நிறமுடையவன். கார்த்திகேயன் - கார்த்திகைகளின் புத்திரன். வரைபகவெறிந்தோன் - (கிரௌஞ்ச) மலையைப் பிளந்தவன். செட்டி - வைசியனாகப் பிறந்தவன். அரன்மகன் - சிவனுக்கு மகன். கங்கைமைந்தன் - கங்கையின் மகன். ஆண்டலைக்கொடியுயர்த்தோன் - கோழிக்கொடியுடையவன். சரவணபவன் - சரவணவாவியிற் பிறந்தவன். கடம்பன் - கடப்பமாலை தரித்தவன். தாரகற்செற்றோன் - தாரகாசுரனைக்கொன்றவன். ஆசான் - குரு.

உ௪. குறிஞ்சிவேந்தன் - குறிஞ்சி நிலத்திற்குத் தலைவன். வேலினுக்கிறை - வேற்படைக்குத் தலைவன். விசாகன் - விசாகநாளிற் பிறந்தவன். சேந்தன் - திருச்செந்தூரையுடையவன். காங்கேயன் - கங்கையின் புத்திரன். செவ்வேள் - செம்மையாகிய வேள். சிலம்பன் - மலைகளையுடையவன். மஞ்ஞையூர்தி - மயில்வாகனமுடையவன். சூர்ப்பகைவன் - சூரனுக்கு விரோதி. வள்ளிமணவாளன் - வள்ளிநாயகிக்கு நாயகன். தெய்வயானைகாந்தன் - தெய்வயானையம்மைக்கு நாயகன். குமரன் - அருவருப்புகளையழிப்பவன், என்றுமிளமையுடையவன். புலவன் - அறிவுடையவன்.

## காமன்பெயர்.

உ௫. காமன் - காமத்தினையுண்டாக்குவோன். திருமகண்மைந்தன் - இலக்குமியின் புத்திரன். மாரன் - விகாரமுடையார்க்கு மரணவேதனைசெய்வோன். சித்தசன் - மனசிற்பிறந்தவன். சம்பராரி - சம்பரனுக்குப் பகைவன். உருவிலி - வடிவமில்லாதவன். மன்மதன் - புத்தியைமயக்குவோன். மீன்கொடியுயர்த்ததோன்றல் - மீன்கொடியுடையவன். இரதிகாதலன் - இரதிதேவிக்கு

* முருகு—தெய்வத்தன்மை, இளமை.

நாயகன். வசந்தன் - வேனிற்காலத்தலைவன். வேனிலாளி - வேனிற்காலத்தலைவன். கருப்புவில்லி - கரும்பாலாயவில்லுடையவன். கந்தர்ப்பன் - கெட்ட கர்வமுள்ளவன். மதன் - மயக்கஞ்செய்பவன். பூவாளி - புட்பமாகிய பாணமுடையவன்.

உசு. திங்கட்குடையோன் - சந்திரனைக் குடையாகவுடையவன். தென்றற்றேரினன்-தென்றற்காற்றைத் தேராகவுடையவன். வில்லி - வில்லையுடையவன். மோகன் - மயக்கஞ்செய்பவன். ஐங்கணைக்கிழவன் - ஐந்து பாணங்களுக்குத் தலைவன். வேள் - விருப்பத்திற்குரியோன். அநங்கன்-உருவமில்லாதவன். மான்மைந்தன் - விட்டுணுவின் மகன். மனோபவன் - மனசிற்பிறந்தவன். மனோசன் - மனசிற்பிறந்தவன். அங்கசன் - விருப்பமுண்டாக்குவோன். மனோபு - மனசிற்பிறந்தவன். ஆழிமுரசோன்-சமுத்திரத்தை முரசமாகவுடையவன்.

## வைரவன்பெயர்.

உஎ. வைரவன் - பயஞ்செய்பவன். முத்தன்-மகிழ்ச்சியுடையவன். குமரன் - அருவருப்புகளை யழிப்பவன். முடுவற்படையோன் - நாய்ப்படையுடையவன். காரி-கருநிறமுடையவன். சித்தன் - சித்திகளையுடையவன். கேத்திரபாலன் - ஆலயங்களைக்காப்பவன். வித்தகன் - நாகரிகமுடையவன். ஞாளியூர்தி-நாய்வாகனமுடையவன். கருங்குதிரையாளி - கருங்குதிரையுடையவன். வடுகன் - பிரமசரியமுடையவன்.

## ஐயன்பெயர்.

உஅ. ஐயன் - வணங்கப்படத்தக்கவன். காரி - கருநிறமுடையவன். கடல்வண்ணன் - கருநிறமுடையவன். சாத்தா - (துட்டரைத்) தண்டிப்பவன். பூரணைகேள்வன் - பூரணைக்கு நாயகன். யோகி - யோகமுடையவன். புட்கலைமணாளன் - புட்கலைக்குநாயகன். மாசாத்தன் - மகாநிக்கிரகமுடையவன். செண்டாயுதன் - செண்டினை, ஆயுதமாகவுடையன். வெள்ளையானையூர்தி - வெள்ளையானைவாகனமுடையவன். ஆரியன் - அருச்சிக்கத்தக்கவன். அறத்தைக்காப்போன் - தருமத்தைக்காப்பவன். அரிகரகுமரன்-மோகினிவடிவங்கொண்ட விட்டுணுவுக்குஞ் சிவனுக்கும் மகன்.

## குபேரன்பெயர்.

உகூ. குபேரன் - அருவருப்பான சரீரமுடையவன். அரனதுதோழன் - சிவனுக்கு நண்பன். கின்னரர்பிரான் - கின்னரர்களுக்குத்தலைவன். அளகையாளி-அளகை நகரியையாள்பவன். நரவாகனன்-நரவாகனமுடையவன். சோமன்-நன்மைசெய்பவன். புட்

பகவிமானமுள்ளோன் - புட்பம்போன்ற விமானமுடையவன். இருநிதிக்கிழவன் - சங்கநிதி பதுமநிதிகளுக்குத் தலைவன். ஏகபிங்கலன் - பொன்னிறமான ஒற்றைக்கண்ணுடையவன். இயக்கர்கோமான் - இயக்கருக்குத் தலைவன். மரகதன்............தனதன் - திரவியங்கொடுப்பவன், தனத்தைக்காப்பவன். மந்திரி - சிவனுக்குத் தோர்ச்சித்துணைவன். வைச்சிரவணன் — * விச்சிரவாவினுடைய புதல்வன்.

## யமன்பெயர்.

௩௦. யமன் - சங்காரஞ் செய்வோன். சமன் - நடுநிலையுடையவன். செங்கோற்கடவுள் - நீதிசெய்யுங் கடவுள். கூற்று - உயிர்களை யுடம்பினின்று பிரிப்போன். தருமன் - நீதிசெய்பவன். அந்தகன் - அழிவுசெய்பவன். சண்டன் - கடுங்கோபமுடையவன். நமன் - நியமித்தலுடையவன். வைவச்சுதன்-சூரியனுடையமகன். நடுவன் - நடுநிலையுடையவன். தென்றிசைக்கோன் - தென்றிசைக்குத் தலைவன். அரி - முடிவுசெய்பவன். மறலி - வலிமையுடையவன். எருமையூர்தி - எருமைவாகனமுடையவன்.

## காலன்பெயர்.

காலன் - இருவினைகளையுங் கணக்கிடுவோன், வயசுகணிப்போன். கால் - காலத்தைச்செய்பவன். மறல் - வலியுடையவன். மடங்கல் - இறுதிசெய்வோன். பாசத்தன்-பாசமுடையவன்.

## தருமதேவதையின்பெயர்.

௩௧. தருமதேவதை-தருமத்தெய்வம். மரகதவல்லி............ பூகநிழலுற்றவஞ்சி - கமுகநிழலிலிருக்கும் பெண். பரமசுந்தரி - பேரழகுடையவள். இயக்கி..............பகவதி - மேன்மைவீரம் முதலியன வுடையவள். அம்மை - தாய்போல்பவள். அருகனைமுடிதரித்தாள்...........அம்பிகை - தாயொப்பவள். அறத்தின்செல்வி - தருமமாகிய செல்வமுடையவள். அம்பாலிகை - தாயொப்பவள்.

## உமையின்பெயர்.

௩௨. உமை - பெண்ணே! உ! வேண்டாம் (என்று தவத்தினின்று தடுக்கப்பட்டவள்,) காப்பவள். அரனிடத்தவள் - சிவனுடைய இடப்பாகத்திருப்பவள். காமக்கோட்டத்தி - காமக்கோட்டமுடையவள். அம்பிகை - (உலகத்துக்குத்) தாய். மாதா - தாய். தருமத்தின்செல்வி - (முப்பத்திரண்டு) அறங்களின் சிறப்புடைய

* விச்சிரவா - புலத்தியமுனிவருடைய மகன்.

வள். தேவி - பிரகாசமுடையவள். சாம்பவி - சம்புவின் மனைவி. மலைமடந்தை - மலை (யரசனுடைய) மகள். பரை - மேலானவள். சிவை - நன்மைசெய்பவள், சிவனுடைய மனைவி. கௌரி - பச்சை நிறமுடையவள். பார்ப்பதி - மலையின்புதல்வி. பவானி - பவனுடைய மனைவி. சத்தி-வலிமையுடையவள். நாரி-மேலானபெண்.

## கங்கையின்பெயர்.

௩௩. கங்கை - சிவன் சடையினின்று பூமியையடைந்தது, விசிட்டமானதானத்திலே செல்லுதலுடையது, உயிர்களை உயர்ந்த நிலையிற் போக்குவது. வரநதி - மேலான நதி. மந்தாகினி - மெல்ல வளைந்து செல்லுவது. திரிபதகை - (சுவர்க்க மத்திய பாதலமாகிய) மூன்றுலகங்களிலுஞ் செல்வது. சுரநதி-தேவர்களுடைய நதி. சானவி - சன்னுமுனிவருடைய செவியினின்றும் வந்தது. பகீரதி - பகீரதனாற் கொண்டுவரப்பட்டது.

## காடுகோள்பெயர்.

காடுகாள் - காட்டில் வாசஞ்செய்தற்குரியவள்; (இது காடுகிழாஅள் என்பதன் மரூஉ. மூதணங்கு - பழையபெண். மோடி - பலமுடையவள். கொற்றி - வெற்றியுடையவள். சூரி - வீரமுடையவள். வடுகி - வடுகனை (ப்பிள்ளையாக) உடையவள். மாரி - கொலை செய்பவள். வடுகன்றாய் - வைரவருடைய தாய்.

## திருமகள்பெயர்.

௩௪. திருமகள்-பொருட்குரிய பெண், அழகுடையவள். கடற்பிறந்தகோதை - பாற்கடலிற் பிறந்த பெண். மா - உலகமாதா, திரவியமுடையவள். அரிப்பிரியை - விட்டுணுவின் மனைவி. செய்யாள்-செம்மையுடையவள். ஆக்கம்-செல்வமுடையவள். பொன்-பொன்னுடையவள். பொறி - செல்வமாயுள்ளவள். சீதேவி - எல்லாராலும் சேவிக்கப்படுபவள். அலர்மகள் - (தாமரை) மலரிலிருப்பவள். பொருளின்செல்வி-பொருட்செல்வமுடையவள். தாக்கணங்கு - தகுதியுடையபெண், கண்டார்க்கு விருப்புண்டாக்கித் தாக்கும் பெண். இளையாள் - பின்பிறந்தவள். பூமின் - (தாமரைப்) பூவில்வாழும் பெண். இலக்குமி - எப்பொருளையுங் காண்பிப்பவள். சலைசை—தாமரைப்பூவிலிருப்பவள். இந்திரை - மேலான செல்வமுடையவள்.

## நாமகள்பெயர்.

௩௫. நாமகள் - நாவில்வாழ்பவள். கலைமகள் சாத்திரங்கட்குரியவள். பனுவலாட்டி - நூலுக்குரியவள். காயத்திரி - பாடு

வோனைக் காப்பவள். ஞானமூர்த்தி - ஞானரூபி. உலகமாதா - உலகத்திற்குத்தாய். பிராமி - பிரமாவின் மனைவி. வெள்ளைமெய்யாள் - வெண்ணிறமேனியுடையவள். வெண்சலசமுற்றாள் - வெண்டாமரையிலிருப்பவள். பாரதி - பரதனென்னும் யாகபுரோகிதனுடைய துதிக்குக் காரணமாயிருப்பவள். இசைமடந்தை - இசைக்குரியவள். அயன்மனைவி - பிரமாவின் மனைவி. வாக்காள்-வாக்கிலுள்ளவள். வாணி - சொல்லப்படுபவள்.

## மூதேவியின்பெயர்.

நசு. மூதேவி - மூத்ததேவி. சேட்டை - மூத்தவள். இந்திரைக்குமூத்தாள் - இலக்குமிக்கு மூத்தவள். சீர்கேடி - சீர்கெட்டவள். சிறப்பிலாதாள் - சிறப்பில்லாதவள். * ஏகவேணி - எண்ணெய்பூசுதல், வாருதல் முதலிய சுத்திக்கிரியை செய்யப்படாது முதுகிலே தூங்கும் ஏகபந்தமான சடையுடையவள். காகத்துவசமுற்றாள் - காகக்கொடியுடையவள். கேட்டை — கேடுசெய்பவள். கெடலணங்கு - கேட்டைத்தரும்பெண். கழுதைவாகனி - கழுதைவாகனமுடையவள். கலதி - கீழ்மையுடையவள். தௌவை - மூத்தவள். மூகடி............

## இந்திரன்மனைவியின்பெயர்.

நஎ. இந்திராணி - இந்திரனுடைய மனைவி. புலோமசை - புலோமனுடைய புதல்வி. சசி - அன்னம்போல நடப்பவள். † அயிராணி - பூசிக்கத்தக்கவள், நன்குமதிக்கப்படுபவள்.

## இந்திரன்மைந்தன்பெயர்.

சயந்தன் - (சத்துருக்களை) வெல்லுபவன், அழகினாலெவரையும் வெல்வோன்.

## அமரர்மாதின்பெயர்.

அரமகள்............அரம்பை - விருப்பங்கொடுப்பவள்.

## தெய்வமெல்லியர்பொதுப்பெயர்.

சூர்..........அணங்கு............

## காளியின்பெயர்.

நஅ. காளி - கருநிறமுடையவள். சூரி - வீரமுடையவள். மாலினி - கரியவள். எண்டோளி - எட்டுத்தோள்களுடையவள்.

* இதன்பொருள் அத்யாத்மராமாயணவுரையிற் கண்டது.
† அர்யாணி என்னும் ஆரியபதம் அயிராணி என்றாயிற்று.

சூலி - சூலமுடையவள். சண்டிகை - கோபமுடையவள், சண்டாசுரனைக்கொன்றவள். தேவி - பிரகாசமுடையவள். வீரி - வீரமுடையவள். மாதரி...........கங்காளி - கங்காளமுடையவள். வேதாளி - வேதாளவைரவசம்பந்தி. மாதங்கி - மதங்கமுனியின் புதல்வி. தாரகற்செற்றதையல்-தாரகாசுரனைக்கொன்றவள். பைரவி-அச்சங்கொடுப்பவள். சிவை - சிவனுடைய மனைவி. சாமுண்டி - சண்டனையு முண்டனையுங் கொல்லவந்தவள். ஆரணி...........வல்லணங்கு - வலிமையுடையவள். ஐயை - அருச்சிக்கப்படத்தக்கவள். யாமளை - பச்சைநிறமுடையவள். முக்கண்ணி - மூன்றுகண்களுடையவள்.

ௗகூ. அலகைக்கொடியுயர்த்தாள் - பேய்க்கொடியுடையவள். * மதுபதி - மதுவுக்குத்தலைவி. ஆளியூர்தி-சிங்கவாகனமுடையவள். மாயை-மாயமுடையவள். யோகினி-யோகத்தையுடையவள்.

## இடாகினியின்பெயர்.

இடாகினி - இடனென்பவனைக் கொல்லவந்தவள். வலவை - வல்லமையுடையவள். சூர்மகள் - அச்சஞ்செய்யும்பெண். மாயவள் - மாயத்தையுடையவள்.

## காளியேவல்செய்மகளின்பெயர்.

சன்மினி - தோற்சட்டையுடையவள். வஞ்சப்பெண் - வஞ்சத்தையுடையவள்.

## துர்க்கையின்பெயர்.

௪௦. துர்க்கை - பிரயாசத்தாலறியப்படுபவள், காடுமுதலிய அரண்களிலேயிருப்பவள், † துர்க்கனைக்கொன்றவள். அமரி-போரில்வல்லவள், அலங்கரித்தலில்லாதவள். எண்டோளி-எட்டுத்தோளுடையவள். வெற்றி - வெற்றமுடையவள்; வெற்றம் - வெற்றி. அந்தரி-பிரமத்தைத்தரித்தவள். அம்பணத்தி - ‡ மரக்காலென்னுங் கூத்துடையவள். சமரி - போரில்வல்லவள். பாலைக்கிழத்தி-பாலைநிலத்துக்குத்தலைவி. சயமகள்-வெற்றியுடையவள். வீரச்செல்வி - வீரச்சிறப்புடையவள். குமரி - அழிவில்லாதவள். மகிடற்செற்றாள் - மகிடாசுரனைக்கொன்றவள். கொற்றவை - வெற்றியுடையவள். சக்கிரபாணி-சக்கிரப்படையைக் கையிலுடையவள். விமலை-மலமில்லாதவள். கலையானத்தி - மான்வாகனமுடையவள். விச

---

* மது - கள்ளு. † "துர்க்கனைக்கொன்றவாற்றாற் றுர்க்கையாயினள்" என்பது காசிகாண்டம்; வச்சிரபஞ். கஅ.

‡ மரக்காலின்மேலே நின்றாடப்படுதலின் மரக்காலெனப்பட்டது; மரக்கால் - ஓரளவைக்கருவி.

யை - வெற்றியுடையவள். நாரணி-எங்கும் வியாபகமுடையவள். விந்தை............

சக. நீலி - கருநிறமுடையவள். * காத்தியாயனி - கத்தியய ன்மரபிற் பிறந்தவள். மேதிச்சென்னிமிதித்தமெல்லியல் - மகிடா சுரனுடைய தலையைவெட்டி அதன்மேலேநின்றவள். கௌரி - பச் சைநிறமுடையவள். ஐயை - அருச்சிக்கப்படத்தக்கவள். மாலினு க்கிளையநங்கை, விஷ்ணுவுக்குத் தங்கை. பகவதி - மேன்மை,வீரம் முதலிய ஆறுமுடையவள். வாள்கைக்கொண்டாள் - வாட்படை கையிற்கொண்டவள். சூலி - சூலமுடையவள். சண்டிகை-கோப முடையவள், சண்டாசுரனைக்கொன்றவள். கன்னி - கன்னித்தன் மையுடையவள். சுந்தரி - அழகுடையவள்.

## தேவர்பெயர்.

சஉ. தேவர் - பிரகாசமுடையவர், கிரீடையுடையவர். அம ரர் - மரணமில்லாதவர். பண்ணவர் - தகுதியுடையவர். புத்தே ளிர் - அறிவுடையவர். கடவுளர் - மிக்கவர். அண்டர் - ஆகாயத்தி லிருப்பவர். உம்பர் - மேலானவர். இமையவர் - கண்ணிமையாத வர். விபுதர் - விசேஷவறிவுடையவர். வானோர் - வானிலிருப்ப வர். இலேகர் - கண்டம் முதலிய உறுப்புக்களிலே நல்ல ரேகையு டையவர், உயிர்களுடைய நன்மைதீமைகளை எழுதுவோர். புலவர்- அறிஞர். விண்ணோர் - சுவர்க்கலோகத்திலிருப்பவர். அமுதர்-மர ணமில்லாதவர். ஆதித்தர் - அதிதியின்புத்திரர். மேலோர் - மேலா னவர். ஐயர் - பூசிக்கத்தக்கவர். சுரர் - † பாற்கடலிற்றோன்றிய நறவமுண்டவர், நல்லொளியுடையவர், நன்மைசொல்பவர். தீர் த்தர் - யாகசம்பந்தமுடையவர். உயர்நிலத்தவர் - மேலுலகத்தி லுள்ளவர்.

சஙு. தெய்வம் - பிரகாசமுடையது. அணங்கு — அஞ்சப்படு வது. புத்தேள்............சூர் — அஞ்சப்படுவது. கடவுள்—மிக்கது. தே — ஒளியுடையது. தெய்வதம் - பிரகாசமுடையது.

## அசுரர்பெயர்.

அசுரர் - தேவத்துவமடையாதவர், அமிர்தம்பெறுதவர், உயிர் களைக்கவர்வோர், யாகபாகத்தால் விலக்கப்பட்டவர், தானவர் - ‡ தனுவென்பவளிடத்திற்பிறந்தவர். அவுணர் - தாழ்வுடையவர்,

---

* கதனுடைய மரபிற் பிறந்தவளென்பது வாசஸ்பத்தியம்.

† "வாருணிநறவம் பிறந்ததுபின்னர் மற்றது நுகர்தலாற்றே வர் சீர்கெழுசுரராயினர்" என்பது கூர்மபுராணம்.

‡ தனு - தக்கன்புத்திரிகளுளொருத்தி.

இழிவுடையவர். தைத்தியர் - திதியின்புத்திரர். திதியின்மைந்தர் - திதியின்புத்திரர். நிசாசரர் - இரவிற்சரிப்பவர்.

## இராக்கதர்பெயர்.

சச. இராக்கதர் - தம்மைக்காப்பவர். நிருதர் - நிருதியின் குமாரர். பிசிதவூணர் - நிணந்தின்பவர். நிசாசரர் - இராத்திரியிற் சரிப்பவர். அரக்கர் - தம்மைக்காப்பவர். சாலகட்ங்கடர் - * சாலகடங்கடையென்பவளின் புத்திரர்.

## விஞ்சையர்பெயர்.

விஞ்சையர் - வித்தையுடையவர். வித்தியாதரர் - வித்தைகளைத்தரித்தவர். கேசரர் - ஆகாயத்திற்சரிப்பவர்.

## கந்தருவர்பெயர்.

கந்தருவர்-பாடுந்தொழிலுடையவர். யாழ்வல்லோர்-யாழிற் சமர்த்தர். காந்தருவர் — பாடுந்தொழிலுடையவர். கின்னரர் — சிறிது மனுஷரூபமுமுடையவர்.

## பூதத்தின்பெயர்.

சரு. பூதம் - விரும்பியதையடைதலுடையது. குறள் - குறுமையானவடிவுடையது. கிருத்திமம் - ஏவப்படுவது. கூளி......... பாரிடம் - சபையிலிருப்பது. சாதகம்...........

## பேயின்பெயர்.

பேய் - அச்சஞ்செய்வது. பிரேதம் - செல்லுதலுடையது. வேதாளம்............வெறி - கலக்கஞ்செய்வது. மயல் - மயக்கஞ்செய்தலுடையது. பிசாசம் - மாமிசமுண்ணுதலுடையது. பாசம்-பிணித்தலுடையது. வியந்தரம் - ஏவலைத்தரித்தலுடையது. மண்ணை - அழுக்குடையது. சோகு - துயர்செய்வது. கழுது............ கூளி - கூவிளியுடையது. அலகை............கடி-அச்சஞ்செய்வது. சாவு - சவசம்பந்தமுடையது.

## ஆகாயத்தின்பெயர்.

சசு. ஆகாயம் - எப்பக்கத்திலுஞ் சூரியன்முதலியவைகளின் பிரகாசமுடையது, பூமிமுதலியனபோலப் பிரகாசமில்லாதது. அண்டம்............வானுலகு - மேகஞ் சஞ்சரித்தற்குரியவுலகம். மங்குல்............அந்தரம் - அவகாசங்கொடுத்தலுடையது, வெளியாயுள்ளது, நடுவிலுள்ளது. அம்பரம் - மழைக்காலத்திலே பிரா

* சாலகடங்கடை - வித்தியுற்கேசன்மகள்.

ணிகளுக்கு நீர் கொடுத்தலுடையது, முகிலொலித்தற்கிடனாயுள்ளது. கோ - உயிர்கள்செல்லுதற்கிடனாயுள்ளது. குண்டலம்............ககனம்-பறவைகள் செல்லுதற்கிடனாயுள்ளது. காயம் — சூரியன்முதலிய பிரகாசித்தலுடையது. குடிலம்...........புட்கரம் - பிராணிகள் போக்குவரவுசெய்தற்கிடனாய் நின்று காப்பது, நீர் கொடுத்துக் காத்தலுடையது. அநந்தம்-அந்தமில்லாதது. வெளி - வெளியாயுள்ளது. மீ - மேலிலுள்ளது. மாகம்............ஆசினி............நபம் - மேகங்களாலே மறைக்கப்பட்டு மழுங்குதலுடையது. கம் - (வடிவின்மையால்) அறியத்தகாதது. விண்டலம்-முகில்களுக்குரியவிடம். விசும்பு...........வேணி.........வியோமம்-போக்குவரவிற்கிடங்கொடுப்பது, எங்கும் வியாபகமுடையது.

## காற்றின்பெயர்.

சஎ. காற்று............வாதம் - இடையறாது செல்லுதலுடையது. கால்............வளி - பெலமுடையது. மருத்து - உலகினையழித்தலுடையது. வாடை - வடக்கிலிருந்து வருதலுடையது. பவனம்—சுத்திசெய்தலுடையது, செல்லுதலுடையது. வாயு — இடையறாது செல்லுதலுடையது. கூதிர் - குளிர்விப்பது. மாருதம்-உலகினையழித்தலுடையது. மால் - பெருமையுடையது. கோதை - மார்பில் மாலையையுடையது. கொண்டல் - கிழக்கிலிருந்து வருதலுடையது. உலவை - உலாவுதலுடையது. கோடை - மேற்கிலிருந்து வருதலுடையது. ஊதை-ஊதுதலுடையது. வங்கூழ்........ஒலி - ஒலித்தலுடையது. சதாகதி - இடையறாது செல்லுதலுடையது. உயிர்ப்பு - உயிர்த்தற்காரணமாயுள்ளது. அரி - அழித்தலுடையது. கந்தவாகன் - வாசனையைக்கொண்டு செல்லுதலுடையது. பிரபஞ்சனன் - மரக்கொம்புமுதலியவைகளை முரித்தலுடையது. சலனன் - செல்லுதலுடையது.

## மேல்காற்றின்பெயர்.

சஅ. மேல்காற்று - மேற்கினின்று வருங்காற்று. கோடை - மேற்கினின்று வருவது.

## கீழ்காற்றின்பெயர்.

கீழ்காற்று - கிழக்கினின்றுவருங்காற்று. கொண்டல் - கிழக்கினின்றுவருவது.

## வாடையின்பெயர்.

வாடை - வடக்கிலிருந்து வருவது. வடகாற்று - வடக்கினின்று வருங்காற்று. வடந்தை - வடக்கிலிருந்துவருவது.

## பனிக்காற்றின்பெயர்.

பனிக்காற்று - பனியோடு கூடிய காற்று. கூதிர் - குளிருடையது. ஊதை - உயிர்த்தலுடையது.

## சுழல்காற்றின்பெயர்.

சுழல்காற்று - சுற்றுங்காற்று. சாரிகை - சுற்றுதலுடையது. சூறை - கவர்தலுடையது.

## தென்றலின்பெயர்.

சகூ. தென்றல் - தெற்கினின்றுவருவது. தென்கால் - தெற்கினின்று வருங்காற்று. சிறுகால் - சிறியகாற்று. தென்றி - தென்றிசையிலிருந்து வருவது. மலயக்கால் - பொதியத்தினின்று வருங்காற்று. வசந்தன் - வசந்தகாலத்தில் வருவது.

## நெருப்பின்பெயர்.

நெருப்பு............அரி - அழித்தலுடையது. வசு - பேரொளியுடையது. தகனன் - சாம்பலாகவெரித்தலுடையது. அங்கி - மேலேசெல்லுதலுடையது. அனல் - விறகுமுதலியவைகளாலே திருப்தியடையாதது, உயிர்கள்சீவித்தற்குக் காரணமாயுள்ளது. அயவாகனன் - ஆட்டுவாகனமுடையது. தீ - பிரகாசமுடையது. எரி - எரித்தலுடையது. சுசி - சோகஞ்செய்தலுடையது, சுத்தமுடையது. சிகி - சுவாலையுடையது. ஆரல் - தன்பாலிடப்பட்டதையுண்ணுதலுடையது. காற்றின்சகாயன் - காற்றின் நண்பன். கருநெறி - புகைமயமான கரிய வழியுடையது. கனலி - கோபித்தலுடையது. அங்காரகன் - கரியினையழித்தலுடையது. சித்திரபானு - பலவிதகிரணமுடையது.

ருய0. தழல் - பற்றுதலுடையது. உதாசனன் - ஓமஞ்செய்யப்பட்டதை யுண்ணுதலுடையது. தனஞ்சயன் - தனத்தையழித்தலுடையது. சாதவேதா - வேதங்கள் பிறத்தற்குக் காரணமாயுள்ளது, பிராணிகளையறிதலுடையது. முளரி - விறகின்சம்பந்தமுடையது. தென்கீழ்த்திசையிறை-தென்கிழக்குத் திக்குப்பாலகன். சேர்ந்தார்க்கொல்லி - சேர்ந்தாரையழித்தலுடையது. * எழுநா -

* எழுநாக்குகளாவன:—காளி, கராளி, மனோசவை, சுலோகிதை, சுதூம்பரவருணை, புலிங்கினி, விசுவரூபை என்பன. (முண்டகோபநிடதம். க: ச.) தத்துவப்பிரகாசவுரைகாரர் அக்கினியின் ஏழுநாக்குகளாவன: இரணியை, கனகை, இரத்தை, கிருட்டிணை, சுப்பிரபை, அதிரத்தை, வெகுரூபி என்பன என்பர்.

எழுநாக்கு வடிவமான சுவாலையுடையது. வன்னி - தன்பாலிடப் பட்ட * ஹவ்வியத்தைத் தேவர்கள்பா லடைவிப்போன். பாவகன் - சுத்திசெய்பவன். தேயு - ஒளியுடையது. அழல் - அழலுதலுடையது. சுடர் - ஒளியுடையது. ஞெகிழி - விறகின்சம்பந்தமுடையது.

## ஊழித்தீயின்பெயர்.

௫௧. இவ்விருத்தத்தில் கனலொழுங்கு என்பதை இப்பொருட்கேற்பக் கனற்கொழுந்தெனத் திரித்துக்கொள்க. ஊழித்தீ - காலாக்கினி. வடவை - பெண்குதிரையின்முகத்திலுள்ளது. தீத்திரள் - தீயின்திரட்சி. மடங்கல் - இறுதிசெய்வது. வடவாமுகம் - பெண்குதிரையின் முகத்திலிருப்பது. கடையனல் - இறுதியிலுண்டாகுமக்கினி.

## கனற்கொழுந்தின்பெயர்.

கனற்கொழுந்து - அக்கினியின்கொழுந்து. சுவாலை-பிரகாசமுடையது.

## விண்வீழ்கொள்ளியின்பெயர்.

விண்வீழ்கொள்ளி..........உற்கை-எரித்தலுடையது.

## நறும்புகையின்பெயர்.

நறும்புகை - நறுமணப்புகை. வெடி - நறுமணமுடையது. நறை - நறுமணமுடையது. குய்..........

## காட்டழலின்பெயர்.

௫௨. காட்டழல் - காட்டக்கினி. தாவம் - எரித்தலுடையது.

## தீக்கடைகோலின்பெயர்.

தீக்கடைகோல்..........ஞெலிகோல் - கடையுங்கோல்.

## விளக்கின்பெயர்.

விளக்கு - விளக்குவது. தீவிகை - பிரகாசித்தலுடையது. தீபம்-பிரகாசித்தலுடையது. சுடர்-பிரகாசித்தலுடையது. ஒளி-ஒளிர்தலுடையது.

---

* ஹவ்வியம்—தேவர்களை உத்தேசித்து மந்திரசம்பந்தமாக ஓமத்திலேவிடும் பால், நெய் முதலிய உணவுகள்.

## புகையின்பெயர்.

புகை - யாண்டும் புகுதலுடையது. ஆவி-வளர்ச்சியுடையது. தூபம்-பிரகாசமுடையது. தூமம் - அசைதலுடையது. அரி - செல்லுதலுடையது.

## தீப்பொறியின்பெயர்.

தீப்பொறி-அக்கினிப்பொறி. புலிங்கம்-பூற்காரத்தாற்செல்வது.

## தீத்தெய்வத்தின்பெயர்.

தீத்தெய்வம்-அக்கினிதேவன். பாவகன்-சுத்தஞ்செய்வோன்.

## தீத்தெய்வத்தின்பாரியின்பெயர்.

தீத்தெய்வத்தின்பாரி............* சுவாகாதேவி............

## நீரின்பெயர்.

ருரு. நீர் — சுத்திக்குக்காரணமாயுள்ளது. வாரி-வரம்பினாலே தடுக்கப்படுவது. ஆலம்............கீலாலம் — நெருப்பினைத்தணித்தலுடையது, உதராக்கினியைத் தணித்தலுடையது, மறித்துக் கட்டப்படுவது. மழையலர் — மேகங்களின் புட்பம்போன்றிருப்பது. கமலம் - தாகமுள்ளவரால் விரும்பப்படுவது. காண்டம் - விரும்பப்படுவது. நீரம் — பள்ளத்திற்செல்லுதலுடையது, சுத்திக்குக் காரணமாயுள்ளது. புட்கரம்—தேவபூசைக்குக் காரணமாயுள்ளது, யாவராலும் பூசிக்கப்படுவது. சிந்து — ஒழுகுதலுடையது. புனல்............சலிலம் — பிராணிகளாலடையப்படுவது. பாணி — குடிக்கப்படுவது. கார் — மேகசம்பந்தமுடையது. அறல் - முரிதலுடையது. புவனம் - பதார்த்தங்கள் முளைத்தற்குக் காரணமாயுள்ளது. நாரம் - பரமாத்துமாவாற் சிருட்டிக்கப்பட்டது. கனவிரதம் — முகிலின் இரசமாயுள்ளது. கவந்தம்—விரும்பப்படுவது, சரீரத்தினைநிலைபெறுத்துதலுடையது, உயிர்களுக்குச் சுகங் கொடுப்பது. மாரி—மேகசம்பந்தமுடையது. அம்பு-பெருகும்போதொலித்தலுடையது. உதம்—நெகிழ்ச்சியுடையது. அப்பு — வியாபித்தலுடையது. வருணம்—யாவராலுங் கொள்ளப்படுவது. சீவனம்-உயிர்கள் சீவித்தற்குக் காரணமாயுள்ளது. வனம்—யாவராலும் பூசிக்கப்படுவது. வார்-இந்திரனாலே வேண்டப்பட்டது.

ருசு. பயம்-குடிக்கப்படுவது, செல்லுதலுடையது. மழை — இளமைப்பருவத்திற்குரிய குணஞ்செய்தலுடையது. உதகம் — நெகிழ்ச்சியுடையது. தோயம் - உயிர்களை நிலைபெறுத்துதலுடையது.

* சுவாகா — தக்கன்மகள்.

பயசு - குடிக்கப்படுவது, செல்லுதலுடையது. சம்பரம் — இந்திரனாற் கொடுக்கப்பட்டது. பானீயம் — குடிக்கப்படுவது. வயம் — செல்லுதலுடையது. சீவனீயம்—சீவித்தற்குக் காரணமாயுள்ளது. தீர்த்தம்-கடத்தற்குரியது, சுத்தமுடையது. கீரம் - உண்ணப்படுவது. சீதம் - குளிர்ச்சியுடையது. அயம் — செல்லுதலுடையது. அளகம் — செல்லுதலுடையது. ஆம்............ அம்............அமுதம்—இனிமையுடையது. கம்-புகழப்படுவது. சலம்-குளிர்வித்தலுடையது.

## வருணன்பெயர்.

வருணன் — பாசத்தாற்சத்துருக்களைக் கட்டுபவன், வரங்கேட்கப்படுபவன். புனல்வேந்தன் - நீருக்குத்தலைவன்.

## சூரியன்பெயர்.

ருடு. சூரியன் - சனங்களைத் தொழிலில்விடுவோன். பரிதி - வட்டவடிவமுடையவன். பாற்கரன் - ஒளிசெய்பவன். ஆதித்தன் - அதிதியின் மகன், கிரணங்களினாலே நீர்கவர்வோன். பனிப்பகை- பனியையழிப்பவன். சுடர் - பிரகாசமுடையவன், சுடுதலுடையவன். பதங்கன் - செல்லுதலுடையவன். இருள்வலி - இருளைக்கெடுப்பவன். சவிதா - சனங்களைத்தொழில்களிலேசெலுத்துவோன். சூரன் - என்றும் போக்குவரவுசெய்வோன். எல் - பிரகாசமுடையவன். மார்த்தாண்டன் - மிருதண்டருடையபுதல்வன், பிரமாண்டத்தைச் சீவிக்கச்செய்வோன். என்றூழ்...........அருணன் — சஞ்சரித்தலுடையவன். ஆதவன் - பிரகாசமுடையவன். மித்திரன் - எல்லாவுயிர்களிலும் நண்புடையோன், மழையைக்கொடுப்போன். ஆயிரஞ்சோதியுள்ளோன் - ஆயிரங்கிரணமுடையவன். தரணி - ஆகாசத்தைக்கடப்பவன். செங்கதிரோன் - சிவந்தகிரணமுடையவன். சண்டன் - கோபமுடையவன். தபனன் - வெம்மைசெய்வோன். ஒளி - பிரகாசமுடையவன். சான்றோன் - (கருமங்களுக்குச்) சாட்சிகளாயுள்ளவன்.

ருசு. அனலி — அனலுடையது. அரி — இருளையழிப்பவன். பானு-பிரகாசிப்பவன். அலரி - கிரணங்களாற் பரப்பவன், அலர்த்துபவன். அண்டயோநி-பிரமாண்டத்திற்குக்காரணன். கனலி — கனலுதலுடையவன். விகர்த்தனன் — இருளைப்போக்குபவன், ‡விசுவகன்மாவினாலே தணிக்கப்பட்ட ஒளியுடையவன். கதிரவன்-

‡ தன் கணவனாகிய சூரியனுடைய வெம்மையைத் தாங்கலாற்றாது வருந்திய சஞ்சையென்னும் மகள்பொருட்டு விச்சுவகன்மா சாகத்தீவிலே சாணைக்கல்லிலே வைத்துச் சூரியனைக் கடைந்து வெம்மையைக் குறைத்தான் என்பது மார்க்கண்டேயபுராணம்.

கிரணமுடையவன். பகலோன் - பகற்காலத்திற்குரியவன். வெய்யோன் - உட்டணகிரணமுடையவன். தினகரன் - தினங்களைச்செய்பவன். பகல் - நாளினைப்பிரிப்பவன். சோதி - பிரகாசமுடையவன். திவாகரன் - தினங்களைச்செய்பவன். அரியமா - வேகத்தோடுசெல்பவன். இனன் - சஞ்சரித்தலுடையவன். உதையன் - உதித்தலுடையவன். ஞாயிறு........... எல்லை - விளக்கமுடையவன். கிரணமாலி - கிரணக்கூட்டமுடையவன்.

௫௭. * ஏழ்பரியோன் - சப்தா என்னுங் குதிரையுடையவன், ஏழுகுதிரைகளுடையவன். வேந்தன் - பிரகாசமுடையவன். விரிச்சிகன்—குரூரமான கிரணமுள்ளவன். விரோசனன் — மிக்கவொளியுடையவன். இரவி—துதிக்கப்படுபவன். விண்மணி - ஆகாயத்திலே இரத்தினம்போலவிளங்குவோன். அருக்கன் - யாவராலும் பூசைசெய்யப்படுவோன்.

## பரிதியின்வட்டத்தின்பெயர்.

பரிதியின்வட்டம்-சூரியன்போலத்தோன்றும் வட்டம். விசயம்...........

## பரிதியின்கிரணத்தின்பெயர்.

பரிதியின்கிரணம் - சூரியனுடைய கிரணம். கரம் - இருளைநீக்குதலுடையது. தீவிரம் - பேரொளியுடையது.

## சந்திரன்பெயர்.

௫௮. சந்திரன்-எப்போதும் பிரகாசமுடையவன். நிலவு-பிரகாசமுடையவன். சோமன்-அமிர்தம்பிறப்பிப்போன். களங்கன்-களங்கமுடையவன். நிசாபதி-இராத்திரிக்குத் தலைவன். பிறை............ கலையினன் - கலைகளையுடையவன். உடுவின்வேந்தன் - நட்சத்திரங்களின்தலைவன். கலாநிதி - கலைகட்கு இருப்பிடமானவன். குபேரன் - அருவருப்பானசரீரமுடையவன். அலவன் - இராக்காலமுடையவன். சசி - முயற்களங்கமுடையவன். திங்கள்........... அம்புலி...........நிசாகரன்—இரவினைச்செய்பவன். இமகிரணன் —

* போசசம்புகாவியவுரைகாரர் ஒருகுதிரையே எழுமையுடையதாக வழங்கப்படுமென்பர். நிருத்தவுரைகாரர் "சப்தா என்னுங் குதிரை" என்பர்; "நகநுதி யச்சினுற்ற நுதிநுவல் பக்கமாகும்—மகிழ்வுறு சந்தச்சான வயப்பரி யேழினுமங்—திகழ்காயத்திரியினோடு திருட்டுபு செகதிவென்றி—மிகுமனுட் டுபுரற்பந்தி விருகதி விளங்கி யோங்கும்" "மருவு முட்டிணிகே யென்னும் வாம்பரி யேழும்பூண்ட" என்பது மச்சபுராணம்.

குளிர்ந்த கிரணமுடையவன். தண்ணவன் - குளிர்ச்சியுடையவன். குரங்கி - மான்களங்கமுடையவன்.

ருக. மதி - களிப்பினைத்தருபவன். இராக்கதிர் — இரவுக்குரியவொளியாயுள்ளவன். இந்து - குளிர்ந்த கிரணத்தால் நனைப்பவன். தானவன்— அல்லோன் - இராக்காலமுடையவன். விது - தேவர்களாற் பானம்பண்ணப்படுபவன். குமுதநண்பன் - குமுதப்பூவிற்கு நாயகன். சுதாகரன் - அமுதகிரணமுடையவன். * வேந்தன் - பிரகாசமுடையவன். ஆலோன் - இராக்காலமுடையவன். முயலின்கூடு - முயற்களங்கத்திற்கிடமாயுள்ளவன். பசுங்கதிர்த்தே - பசியகிரணமுடையதேவன்.

## செவ்வாயின்பெயர்.

ரு௦. செவ்வாய் - செந்நிறமுடையது. செந்தீவண்ணன் - செந்நிறமுடையவன். அங்காரகன் - செந்நிறமுடையவன், சரீரத்தை வருத்துவோன். சேய் - செந்நிறமுடையவன். குருதி - செந்நிறமுடையது. வக்கிரன் - கொடுமையுடையவன். பௌமன் - † பூமியின்மகன். குசன் - பூமியினின்றும் பிறந்தவன். நிலமகன் - பூமியின்மகன். அரத்தன் - சிவப்புநிறமுடையவன். அழலோன் - நெருப்பினிறமுடையவன். ‡ மங்கலன்— ஆரல் - நெருப்பினிறமுடையவன். உதிரன் - சிவப்புநிறமுடையவன்.

## புதன்பெயர்.

ருக. புதன் - அறிவுடையவன். சிந்தைசூரியன் — சூரியபுத்தியுடையவன். கணக்கன் - கணிதத்தலைவன். தேர்ப்பாகன் - தேருக்குப் பாகன். அருணன் - பச்சைநிறமுடையவன். சாமன் - பச்சைநிறமுடையவன். தூதுவன் - அறிவிப்போன். மால் - பெருமையுடையவன். மதிமகன் - சந்திரனுடைய மகன். அறிஞன் - அறிவு

* இது ராஜா என்னும் வடமொழிக்குச் சமபதம்.

† பரத்துவாசமுனிவர் நிருமதையாற்றங்கரையிலே ஒரு பெண்ணைக் கண்டு மயங்கிப் பூமியிலே வீழ்த்திய வீரியத்தினின்றும் பிறந்து பூமிதேவியால் வளர்க்கப்பட்டமையாற் செவ்வாய்க்குப் பூமகன் எனப் பெயராயிற்று என்பது விநாயகபுராணம்.

‡ விநாயகக்கடவுளுடைய மங்கலக்காட்சி பெற்றமையால் மங்கலனெனப்பட்டான் என்பர். "மங்கலந்திகழ் காட்சிநாம் வந்தருள் வன்பாற்—றங்குவையக மங்கலனெனவுனைச் சாற்றும்" என்பது விநாயகபுராணம்.

டையவன். பாகன் - தேர்ப்பாகன். புலவன் - அறிஞன். * அநுவழி - தூர்த்தஸ்திரிமகன். மேதை - அறிஞன். பச்சை - பச்சை நிறமுடையவன். புந்தி - புத்தியுள்ளோன். பண்டிதன் - ஞானமுள்ளோன்.

## வியாழன்பெயர்.

சுஉ. வியாழன் - மஞ்சணிறமுடையவன். தெய்வமந்திரி - தேவர்களுக்குப் புத்திசொல்வோன். சிகண்டிசன் - அங்கிராமுனியின் மகன். அமைச்சன் - தேவர்களுக்கு மந்திரி. சீவன் - தேவர்களைச் சீவிப்பிப்போன். வேதன் - சாஸ்திரஞானமுடையவன். ஆண்டளப்பான் - ஆண்டுகளையளப்பவன். ஆசான் - தேவர்களுக் காசாரியன். வேந்தன் - பிரகாசமுடையவன். பொன் - பொன்னிறமுடையவன்.

## வெள்ளியின்பெயர்.

வெள்ளி - வெண்ணிறமுடையவன். அசுரமந்திரி - அசுரருக்குப் புத்திசொல்வோன். உசனன் - அசுரர்மேன்மையை வளர்ப்போன். பார்க்கவன் - பிருகுவமிசத்திற் பிறந்தவன். சுங்கன்—
சுக்கிரன் - வெண்ணிறமுடையவன், தேவர்களுக்குத் துக்கங்கொடுப்பவன். பளிங்கு - பளிங்குநிறமுடையவன். புகர்—
† கவி - கவியென்னுமுனியின் புத்திரன், சாதுரியமாகப் புகழ்வோன். மழைக்கோள் - மழைக்குரிய கிரகம்.

## சனியின்பெயர்.

சுரு. சனி - மெல்லச் செல்வோன். கதிர்மகன் - சூரியனுடைய மகன். மந்தன் - மெல்லச்செல்வோன். காரி - கருநிறமுடையவன். கரியவன் - கருநிறமுடையவன். சௌரி - சூரியனுடையமைந்தன். மேற்கோள் - மேலுள்ள கிரகம். முதுமகன் - முதியமகன். பங்கு-முடமுடையவன். நீலன்-கருநிறமுடையவன். முடவன் - முடக்காலுடையவன். நோய்முகன் - நோய்பொருந்திய முகமுடையவன்.

## இராகுவின்பெயர்.

இராகு - சந்திரனை உண்டு கக்குவோன். தமம் - வருத்துதலுடையது. கறுப்பு - கறுப்புநிறமுடையது.

---

* ஹநு - கற்புவழுவினவள்; என்றது; சந்திரனைப் புணர்ந்து கற்பிலே வழுவிய வியாழன் மனைவியாகிய தாரையை. வழி-மகன். † பிருகுமுனி மரபிலுள்ள அப்பிராணன் மகன்.

## கேதுவின்பெயர்.

கேது - தன்னையறிவிக்குமியல்புடையது. செம்மை - சிவப்பு நிறமுடையது. சிகி— கதிர்ப்பகை-சூரியனுக்குப் பகைவன்.

## மேடத்தின்பெயர்.

கூசு. மேடம்-ஆட்டுவடிவமுடையது. மை— வருடை— ஆடு— கொறி— மறி—

## இடபத்தின்பெயர்.

இடபம் - எருத்துவடிவமுடையது. குண்டை— சே— மூரி— புல்லம்— கோ— விடை—

## மிதுனத்தின்பெயர்.

மிதுனம் - இரட்டையாயுள்ளது. தண்டு - யாழ்வடிவுள்ளது. யாழ் - யாழ்வடிவுள்ளது. விழவு— இரட்டை-இரண்டாயுள்ளது. சவைமகள்—

## கர்க்கடகத்தின்பெயர்.

கர்க்கடகம் - நண்டுவடிவமுடையது. நண்டு— ஞெண்டு— அலவன்— சேக்கை— நள்ளி—

## சிங்கத்தின்பெயர்.

கூரு. சிங்கம் - சிங்கவடிவமுடையது. அரி— ஆளி— மா— கொடும்புலி—

## கன்னியின்பெயர்.

கன்னிக்கு - (மடந்தையர்பேரெல்லாம் வரும்.)

## துலாத்தின்பெயர்.

துலாம் - தராசுவடிவுடையது. துலை— நிறை— நிறுப்பான்— சீர்— கோல்— தூக்கு— வாணிகன்—

## விருச்சிகத்தின்பெயர்.

விருச்சிகம் - தேள்வடிவுள்ளது. தெறுக்கால்— தேள்—

## தனுவின்பெயர்.

சுசு. தனு - வில்வடிவமுடையது. கொடுமரம் - வில்வடிவமுடையது. துரோணம் - வளைந்தவடிவுடையது. * சாபம் - வில்வடிவமுடையது. சிலை - வில்வடிவமுடையது.

## மகரத்தின்பெயர்.

மகரம் - மகரமீன்வடிவமுடையது. மான்— கலை— சுறு—

## கும்பத்தின்பெயர்.

கும்பம் - குடவடிவமுடையது. குடம்— கரீரம்— சாடி— குடங்கர்—

## மீனத்தின்பெயர்.

மீனம் - மீன்வடிவமுடையது. மீன்— மயிலை— மற்சம் - கர்வமுடையது. சலசரம் - சலத்திற்சரிப்பது.

## அச்சுவினியின்பெயர்.

சுஎ. அச்சுவினி - குதிரைரூபமுடையது. பரி - குதிரைவடிவுடையது. மருத்துவநாள் - மருத்துவருக்குரியநாள். 'வாசி - குதிரைவடிவுடையது. ஐப்பசி— யாழ்— ஏறு— இரலை— முதனாள் - நாள்களுள் முதலிலுள்ளது. சென்னி—

## பரணியின்பெயர்.

கிழவன்— சோறு— பகலவன்— தராசு— தாழி— தருமனாள்— அடுப்பு - அடுப்புப்போல்வது. பூதம்— தாசி— முக்கூட்டு - மூன்றுசேர்ந்தது.

## கார்த்திகையின்பெயர்.

சுஅ. எரிநாள் - அக்கினிக்குரியநாள். ஆரல் - அக்கினிக்குரியது. இருள்— அறுவாய் - ஆறுபிரிவுள்ளது. அளக்கர்— நாவிதன்— அங்கி - அக்கினிக்குரியது. அளகு—

## உரோகிணியின்பெயர்.

பிரமனாள் - பிரமாவுக்குரியநாள். சகடு - தேர்ச்சில்லுப்போன்றது. பண்டி— சதி— வையம்—

---

* சாபம் - மூங்கிலாற் செய்யப்படுவது; பம்—மூங்கில்.

உருள்— விமானம்— தேர்— ஊற்றுல்—
உரோணி—

## மிருக்சீரிடத்தின்பெயர்.

கூகூ. மிருகசீரிடம் - மானின்தலைபோன்றது. திங்களுள் - சந்திரனுக்குரியநாள். மதி - சந்திரனுக்குரியநாள். பேராளன்—
மான்றலை - மான்தலைபோல்வது. மாழ்கு—
மார்கழி— மும்மீன் - மூன்று நட்சத்திரம். நரிப்புறம்—
பாலை—

## திருவாதிரையின்பெயர்.

செங்கை— மூதிரை— யாழ்— ஈச
ன்றினம் - சிவனுக்குரியநாள்.

## புனர்பூசத்தின்பெயர்.

எ0. அதிதிநாள் - அதிதிக்குரியநாள். கழை— புன
ர்தம்— கரும்பு— புனிதம்— பிண்டி—
ஆவணம்—

## பூசத்தின்பெயர்.

குருவினாள்— கொடிறு— வண்டு—
காற்குளம்—

## ஆயிலியத்தின்பெயர்.

அரவினாள் - ஆதிசேடனுக்குரியநாள். கௌவை—
பாம்பு - ஆதிசேடனுக்குரியநாள். ஆயில்—

## மகத்தின்பெயர்.

எக. கொடுநுகம் - வளைந்தநுகம்போல்வது. வேள்வி—
வாய்க்கால்— வேட்டுவன்— மாசி—
முதலில்வருஞ்சனி - முதற்கோணத்திசைக்கண்வருநாள்.

## பூரத்தின்பெயர்.

இடையெழுஞ்சனி— துர்க்கை-துர்க்கைக்குரியநாள்
எலி— பகவதிநாள் - துர்க்கைக்குரியநாள். நாவிதன்—
கணை—

## உத்தரத்தின்பெயர்.

எஉ. பங்குனி— கடையெழுஞ்சனி— செங்
கதிர்நாள் - சூரியனுக்குரியநாள்.

## அத்தத்தின்பெயர்.

காமரம்- அங்கிநாள்- கௌத்துவம்- கைம்மீன்- களிறு- நவ்வி- ஐவிரல்-

## சித்திரையின்பெயர்.

எ௩. நெய்- பயறு- மீன்- அறுவை- ஆடை- தூசு- நடுநாள் - நடுவிலுள்ள நாள். தச்சன்- துவட்டாநாள் - துவட்டாவுக்குரியநாள்.

## சோதியின்பெயர்.

விளக்கு - விளக்குப்போல்வது. மரக்கால்- வீழ்க்கை- வெறுநுகம்- காற்றினாள் - காற்றுக்குரியநாள். காற்று- தீபம்-

## விசாகத்தின்பெயர்.

எச. விசாகம் - ஒளியுடையது. முற்றில் - சுளகுபோன்றது. வைகாசி- காற்றுநாள்- முறம் - சுளகுபோன்றது. சுளகு - சுளகுபோன்றது. சேட்டை-

## அனுடத்தின்பெயர்.

புல் - முடப்பனைபோன்றது. தாளி - முடப்பனைபோன்றது. பெண்ணை - முடப்பனைபோன்றது. தேள்- போந்தை - முடப்பனைபோன்றது. மித்திரநாள்-

## கேட்டையின்பெயர்.

எரு. சேட்டை- இந்திரனாள்-இந்திரனுக்குரியநாள். வேதி- தழல்- எரி- வல்லாரை-

## மூலத்தின்பெயர்.

தேட்கடை- குருகு- கொக்கு- சிலை- அன்றில்- ஆனி- அசுரநாள்-

## பூராடத்தின்பெயர்.

எசு. உடைகுளம் - உடைகுளம்போல்வது. முற்குளம்- நீர்நாள்-

## உத்தராடத்தின்பெயர்.

கடைக்குளம்- ஆனி- விச்சுவநாள்- ஆடி-

## திருவோணத்தின்பெயர்.

மாயோனாள் - விட்டுணுவுக்குரியநாள். உலக்கை- முக்கோல்- சிரவணம்- சோணை-

## அவிட்டத்தின்பெயர்.

எஎ. காகப்புள்- வசுக்கனாள்- பறவை- புள்- ஆவணி-

## சதயத்தின்பெயர்.

செக்கு- சுண்டன்- போர்- குன்று- வருணனாள்-

## பூரட்டாதியின்பெயர்.

எஅ. முற்கொளுங்கால்- நாழி- புரட்டை-

## உத்தரட்டாதியின்பெயர்.

முரசு- பிற்கொளுங்கால்- மன்னன்-

## இரேவதியின்பெயர்.

இரவிநாள் - சூரியனுக்குரியநாள். கலம்- தோணி- தொழு- நாவாய் - தோணிபோல்வது. கடைநாள் - இறுதியிலுள்ளநாள். சூலம்- பெருநாள்-

## அருந்ததியின்பெயர்.

எகூ. அருந்ததி- வடமீன் - வடக்கில்விளங்கும் நட்சத்திரம். சாலி - கீர்த்தியுடையவள்.

## விண்மீனின்பெயர்.

விண்மீன் - விண்ணிலேமீன்போல்வது. உடு - ஆகாயத்திலே செல்லுதலுடையது. தாரகை - விண்ணிலே செல்லுதலுடையது. பம்-பிரகாசமுடையது. உற்கை - தழல்போல்வது. சுக்கை - பூப்போல்வது.

## நாழிகையின்பெயர்.

நாழிகை - கழிந்துபோதலுடையது. கடிகை-விதிக்கப்பட்ட காரியத்தைச் செய்தற்குரியதாய் விளங்குவது. கன்னல்- இரித்தை-

## காலநுட்பத்தின்பெயர்.

துடி- கலை- விகலை-

## காலத்தின்பெயர்.

அ0. காலம் - கணிக்கப்படுவது. வேலை-செல்லுதலுடையது. அமையம்- செவ்வி- எல்வை- பொழுது- பாணி- காலை - கணிக்கப்படுவது. கொன்- பதம்- போழ்து-

## நெடும்போழ்தின்பெயர்.

நீட்டித்தல்- பாணித்தல்- நெடித்தல்-

## காலவிரைவின்பெயர்.

அக. ஒல்லை- இறை- சிறுவரை- இலேசம்- வல்லை- மாத்திரை-

## மத்தியானத்தின்பெயர்.

மத்தியானம் - பகலின் நடுப்பாகம். * நண்பகல் - பகலின் நடுப்பாகம். உச்சி சூரியனையுச்சத்திலுடையது. நடுப்பகல் - பகலின் நடு.

## இராசியின்பெயர்.

இராசி - காலபலனைக் கொடுப்பது. இல் - கிரகங்களுக்கு வீடாயிருப்பது. பவனம் - கிரகங்களுக்கு வீடாயிருப்பது. ஓரை - செல்லுதலுடையது.

## இராவின்பெயர்.

அ௨. இரா - சுகங்கொடுப்பது. அல்- விபாவரி - சந்திரன்முதலியன பிரகாசித்தலுடையது. கங்குல்- அல்கல் - சனங்கள் போக்குவரவின்றித்தங்குதற்குக் காரணமாயுள்ளது. யாமினி - யாமங்களையுடையது. நத்தம் - ஒடுங்குதற்குக் காரணமானது. எல்வி- யாமம்- மாலை- இரசனி - காமமுண்டாக்குவது. நிசி - சனங்களுடைய தொழில்களைக்குறைப்பது.

## பகலின்பெயர்.

எல்- திவா-

## நாளின்பெயர்.

எல்வை- திவசம் - பிரகாசமுடையது. வைகல் - கழிதலுடையது. அல்கல்- தினம்- எல்லை- ஆனியம் - திரும்பிவருதலுடையது. பகல்-

* நன்பகல் என வழங்குவாருமுளர்.

## இருளின்பெயர்.

அ௩. சருவரி — தொழிலைக் கெடுப்பது. அந்தகாரம் - சனங்களுடைய கண்களைக் குருடாக்குதலுடையது. கச்சளம் - மலினமான சலம்போன்றிருப்பது. தமம் - சனங்களை யொடுங்கியிருக்கச் செய்வது. துவாந்தம்—வழிகளை மறைத்தலுடையது. திமிரம்—நிலத்திற்கிரமுண்டாக்குதலுடையது. துணங்கறல்-

## முன்னைநாளின்பெயர்.

நெருநல்- நென்னல்-

## பின்னைநாளின்பெயர்.

பின்றை - பின்னுள்ளது. பிற்றை - பின்னுள்ளது.

## வைகறையின்பெயர்.

அச. வைகறை - நாளின்முடிவாயுள்ளது. புலரி — இருள்புலர்தலுடையது. விடியல் - இருள் புலர்தலுடையது.

## நிலவின்பெயர்.

நிலவு - பிரகாசமுடையது. சந்திரிகை - சந்திரனிலிருத்தலுடையது.

## வெய்யிலின்பெயர்.

வெய்யில் - வெம்மையுடையது. ஆதவம் - தபித்தலுடையது. என்றூழ் - சூரியனாலுருக்கப்படுவது.

## மாலையின்பெயர்.

சாயம் - பகலைமுடிப்பது. சந்தி - பகலுமிரவுஞ் சந்திக்குங்காலம்.

## சாமத்தின்பெயர்.

சாமம்— யாமம் - சனங்களைச் சரியாதுதடுப்பது.

## பருவத்தின்பெயர்.

பருவம் - பிரிவுடையது. ஆனியம் - திரும்பிவருதலுடையது. இருது - செல்லுதலுடையது.

## ஒருகலையின்பெயர்.

அடு. திதி— பக்கம்—

## மாதத்தின்பெயர்.

மாதம் - பூதங்களுக்குப் பரிணமத்தைச்செய்வது. மதி - சந்திரசம்பந்தமுடையது. திங்கள்—

## மதிதேரிகலையிராவின்பெயர்.

சினீவாலி - சந்திரன் அணுவாகக் காணப்படுதலுடையது.

## மதிமறைகலையிராவின்பெயர்.

குகு - இருளாலே மறைத்தலுடையது.

## பூரணையின்பெயர்.

அசு. பூரணை சந்திரகலை நிறைத லுடையது. உவா—
பவ்வம் - சந்திரகலைநிறைதலுடையது.

## அமாவாசையின்பெயர்.

அமாவாசை - சூரியனுஞ் சந்திரனுங்கூட வசித்தலுடையது.
இந்துவோடிரவிகூட்டம் - சூரியனுஞ்சந்திரனுங் கூடுதலுடையது.
அமை - சூரியசந்திரர்கள் கூடிச் சமீபமாக வசித்தலுடையது.

## முதற்பக்கந்தோடங்கி மூன்றுவட்டமாக வருகிற ஐந்து பக்கங்களின்பெயர்.

நந்தை— பத்திரை— சயை— இரி
த்தை— பூரணை—

## ஆவணிமுதலிரண்டிரண்டு மரதமாகிய வறுவகைப் பருவத்தின்பெயர்.

அஎ. கார் - மழைபெய்தலுடையது. கூதிர் - குளிர்காற்று
டையது. முன்பனி - முன்னிரவிற் பனியையுடையது. பின்பனி -
பின்னிரவிற்பனியையுடையது. இளவேனில் - இளவெய்யி லுடை
யது. முதுவேனில் - முதிர்ந்த வெய்யிலுடையது. ஆவணி புரட்
டாதி - கார். ஐப்பசி கார்த்திகை - கூதிர். மார்கழி தை-முன்பனி.
மாசி பங்குனி — பின்பனி. சித்திரை வைகாசி - இளவேனில். ஆனி
ஆடி - முதுவேனில்.

## வருடத்தின்பெயர்.

அஅ. வருடம் - பிரீதிசெய்தலுடையது. வற்சரம் - இருதுக்
கள்வசித்தலுடையது. ஆண்டு— சமை - சனங்கட்குத்துய
ர்செய்தலுடையது. ஆயனம் - வரிசையாக இருதுக்களை விடுதலு
டையது.

## ஆண்டிற்பாதியின்பெயர்.

ஆண்டிற்பாதி - வருடத்திற்பாதி. அயனம் - சூரியகதிக்குக்
காரணமாயுள்ளது.

## ஊழிகாலத்தின்பெயர்.

உகமுடிவு - உகத்தினந்தம். மடங்கல் - இறுதிசெய்வது.

## வாழ்நாளின்பெயர்.

வாழ்நாள் - வாழுநாள். ஆயுள் - செல்லுதலுடையது.

## அயன்வாழ்நாளின்பெயர்.

அயன்வாழ்நாள் - பிரமாவின்வாழ்நாள். கற்பம் - உலகத்தை யழித்தல்வல்லது.

## மழையின்பெயர்.

௮௯. மழை - இளமையடைவிப்பது. துளி - துளித்தலுடையது. திவலை— தூவல் - தூவுதலுடையது. சீகரம் - குளிர்செய்வது. தூறல் - தூறுந்தன்மையுடையது. மாரி - அழித்தலுடையது. வருடம் - பூமியை நனைத்தலுடையது. உறை - சொரிதலுடையது. ஆலி - துளியுடையது. வானம்—

## பெருமழையின்பெயர்.

ஆசாரம் - பரத்தலுடையது.

## விடாமழையின்பெயர்.

பனித்தல்— சோனை—

## துளியின்பெயர்.

௯௦. துளி - துளித்தலுடையது. திவலை— தூவல் - தூவுதலுடையது. சிதர் - சிதறுதலுடையது. சீகரம் - குளிர்ச்சி செய்வது. ஆலி— தளி— உறை - சொரிதலுடையது.

## ஆலங்கட்டியின்பெயர்.

ஆலங்கட்டி - மழைக்கட்டி. ஆலி— கரகம் - பயிரைக் கெடுப்பது. கனோபலம் - மேகத்தின்கற்போன்றது.

## மேலின்பெயர்.

உம்பர்— மேக்கு—

## கீழின்பெயர்.

கிழக்கு—

## மேகத்தின்பெயர்.

௯௧. மேகம் - நீரால் பூமியை நனைப்பது. மங்குல்— சீதம் - குளிர்ச்சியுடையது. பயோதரம் - நீரைத்தரித்திருப்பது.

252



தாராதாரம் - சலதாரைகளைத் தரித்திருப்பது. குயின்—மழை— எழிலி - எழுச்சியுடையது. மஞ்சு— கொண்டல்— சீமூதம்—நீர் கட்டப்பட்டிருத்தலுடையது. கொண்மூ— முகில்— விண்— விசும்பு— மால்— சலதரம் - நீர் தரித்திருப்பது. செல்— புயல்— கனம் - நீரால் வெம்மைநீக்குவது. கந்தரம் - நீர் தரித்திருப்பது. கார் - கருநிறமுடையது. மை - கருநிறமுடையது. மாரி—

## இடியின்பெயர்.

௯௨. இடி - இடித்தலுடையது. வெடி - ஒலியுடையது. ஒலி- ஒலித்தலுடையது. அசனி - அழித்தலுடையது. செல்— விண்ணேறு— மடங்கல் - இறுதிசெய்வது. உரும்— அனலேறு—

## மின்னின்பெயர்.

வித்துத்து - அதிக பிரகாசமுடையது. தடித்து - இருளைக்கண்டித்தலுடையது. சம்பை-மழையையறிவித்து உழவர்துயரைப் போக்குவது. சபலை - மெல்லப்போவது. சஞ்சலை - அசைவுடையது. மின்னல் - பிரகாசமுடையது. கனருசி - மேகத்தின்காந்தி.

## பனியின்பெயர்.

௯௩. இமம் - வருத்தத்தைக்கொடுப்பது. துகினம் - தாமரையை வருத்துவது.

## பரிவேடத்தின்பெயர்.

பரிவேடம்—சூழ்ந்துவளைப்பது. ஊர்கோள் - *குறைவின்றி மண்டலமாக வொளி பரத்தலுடையது. வட்டம் - வட்டவடிவமுடையது.

## வானவில்லின்பெயர்.

இந்திரதனு - இந்திரவில்.

* திருக்கோவையாருரை.

# இரண்டாவது

# மக்கட்பெயர்த்தொகுதி.

## முனிவர்பெயர்.

உ. முனிவர் - மௌனமுடையவர். துறவர் - பொருட்பற்று உடற்பற்று என்னும் இருவகைப்பற்றினையும் விடுதலுடையவர். சார்பில்லோர் — அவ்விருவகைப்பற்றுமில்லாதவர். நீத்தோர் — அவ்விருவகைப்பற்றினையும் நீக்கினவர். தவர் — மனம் பொறியின்வழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உடம்பை வாட்டுதலாகிய தவமுடையவர். முனைவர் - மௌனமுடையவர், கோபமுடையவர். மெய்யர் - உண்மையுணர்ச்சியுடையவர். அறவர் - அறநெறியுடையவர். மாதவர் - மகாதவமுடையவர். கடிந்தோர் - புலன்களிற்செல்லும் இச்சையை அறுத்தவர். அந்தணர் - அழகிய தண்ணளியுடையவர். அடிகள் - ஐயர் - எவராலும் பூசிக்கத்தக்கவர். உறுவர் - யாவரினுமிக்கவர். தாபதர் - தவமுடையவர். இருடிகள் - அறிவின்மிக்கவர். உயர்ந்தோர் - உயர்ச்சியுடையவர். யோகர் - கடவுளைத் தியானிப்பவர். அறிஞர் - அறிவுடையவர். பண்ணவர் - பெருமையுடையவர். அருந்தவர் - பிறராற் செயற்கருந்தவமுடையவர்.

## சமணநீத்தோர்பெயர்.

ங. சமணநீத்தோர் - சமணசமயத்துள்ளமுனிவர். சௌமியர் - சாந்தமுடையவர். யோகர் - கடவுளைத்தியானிப்பவர். திகம்பரர் - உடையில்லாதவர்.

## சைவத்தோர்பெயர்.

சைவத்தோர் - சிவனைக் கடவுளாகவுடையமுனிவர். மாவிரதியர் - மகாவிரதசமயமுடையவர். பாசுபதர்-பாசுபதசமயமுடையவர். காளாமுகர் - காளாமுகசமயமுடையவர்.

## மால்சமயத்தோர்பெயர்.

மால்சமயத்தோர் - விட்டுணுசமயத்தவர். பாகவதர் - பகவானாகிய விஷ்ணுவுக்குப் பாடலாடல் செய்பவர்.

## புத்தர்பெயர்.

புத்தர் - அறிவுடையவர். சீவகர் - சீவித்தலைச்செய்வோர் பௌத்தர் - புத்தனைக் குருவாகவுடையவர். தேரர் - பிச்சையாற்

சீவிப்போர். சாக்கியர் - தேக்கஞ்சோலையில் வசிப்பவர். (சாகம்-தேக்கமரம்.)

சிலர் சமணருள் நிகண்டவாதிகளையே திகம்பரர் என்பர். சைவத்தோர் என்பது சைவத்தவத்தோரைக் குறித்துநின்றது; திவாகரநிகண்டுட் கண்டது. சமணர் என்பதற்குச் சிரமத்தோடு தவஞ்செய்வார் என்பர்.

## சமணரிற் சித்திபெற்றோராவார்.

ச. நீரிலும் பூதலத்திலும் ஆகாயத்திலும் மற்றைய இடங்களிலும் நினைத்துழிச் செல்லுகின்ற சாரணர் எண்மர்; அவர், தலசாரணர், சலசாரணர், பலசாரணர், புட்பசாரணர், தந்துசாரணர், சதுரங்குலசாரணர், சங்கசாரணர், ஆகாசசாரணர் எனப்படுவர். சாரணர் - நினைத்துழிச்செல்வோர்.

## சடைமுடித்தபடிவர்பெயர்.

சடைமுடித்தபடிவர் - சடையை முடித்த வடிவமுடையவர். தாபதர் - தவமுடையவர்.

## அகத்தியன்பெயர்.

அகத்தியன் - விந்தமலையை அடக்கினவன். கும்பயோனி - குடத்தைப் பிறப்பிடமாகவுடையவன். குறுமுனி - குறிய ரூபமுடைய முனி.

உருப்பசி என்னும் நாட்டிய ஸ்திரியிலே மோகங்கொண்ட மித்திரன் வருணன் என்னும் இருவராலும் ஒரு குடத்திலே வீழ்த்தப்பட்ட வீரியத்தினின்று அகத்தியரும் வசிட்டரும் அவதரித்தார்கள் என்பது பாகவதம். மித்திரனுடைய வீரியத்தினால் அகத்தியரும் வருணனுடைய வீரியத்தினால் வசிட்டனும் பிறந்தனர் என்பது இராமாயணம்.

## மறையவர்பெயர்.

ரு. மறையவர் - வேதமோதுதலுடையவர். ஐயர் - பூசிக்கத்தக்கவர். வேதியர் - வேதமோதுதலுடையவர். நூலோர் - பூணூலுடையவர். அறுதொழிலாளர் - ஓதல், ஓதுவித்தல் முதலிய ஆறுதொழில்களையும் ஆள்பவர். ஆய்ந்தோர் - வேதங்களை ஆராய்தலுடையவர். பூசுரர் - பூமிக்குத்தேவர். தீவளர்ப்பவர் - அக்கினி வளர்ப்பவர். தொழுகுலத்தோர் - தொழுங்குலமுடையவர். அந்தணர் - அழகிய தண்ணளியுடையவர். ஆதிவருணர் - முதற்குலமுடையவர். முப்புரிநூன்மார்பர் - முப்புரிநூல்தரித்த மார்புடையவர். மெய்யர் - மெய்புணர்வுடையவர். விப்பிரர் - பூரணமாக்கு

வோர். வேதபாரகர் - வேதம் என்னுங் கடலின் கரையிற் போத லுடையவர். (வேதமுழுதுங் கற்பவர் என்றபடி) வேள்வியாளர் - யாகஞ்செய்பவர்.

அந்தணர் என்பதற்கு வேதாந்தத்தை அணவினவர் என்பது நச்சினார்க்கினியர் கருத்து.

௬. இருபிறப்பாளர்-உபநயநத்துக்கு முன் ஒன்றும் உபநய நத்தோடு ஒன்றுமாகிய இருபிறப்புடையவர். பார்ப்பார் - வேதங் களைப் பார்ப்பவர். மேற்குலர் - மேலானகுலமுடையவர். உயர்ந் தோர் - குலமுதலியவற்றால் உயர்ச்சியுடையவர்.

## பிரமசாரியின்பெயர்.

பிரமசாரி - வேதத்தை அநுசரித்து விரதம் அநுட்டிப்பவன். வன்னி - வருணத்திற்குரிய ஒழுக்கமுடையவன்.

## துரோணசாரியன்பெயர்.

துரோணசாரியன் - துரோணனாகிய குரு. மறைக்கொடி யோன் - வேதத்தைக்கொடியாகவுடையவன். விண்ணூலாளன் - வில்வேதத்தில் நற்பயிற்சியுடையவன். பாரத்துவாசன் - பரத்து வாசமுனிவர் மகன்.

துரோணன் - துரோணகும்பத்திற் பிறந்தவன். துரோணகு ம்பம் - பதக்கென்னும் அளவுகொண்ட நீர்கொள்ளுங் குடம். "பர த்துவாசனென்பான் - விரதவேள்விதன்னின் மேனகையாலான - சுரததாதுவீழ்ந்த துரோணகும்பந்தன்னில் — வரதனொருவன்வந் தான்" என்றார் பாரதகாரர்.

## அறிஞர்பெயர்.

எ. அறிஞர்-மெய்ப்பொருளையறிந்தவர். சான்றவர் - குணம் முதலியவைகளால் நிறைந்தவர். மிக்கோர் - மேற்பட்டவர். நல் லோர் - நன்மையுடையவர். தகுதியோர் - நடுநிலைமையுடையவர். மேலோர் - மேன்மையுடையவர். ஆய்ந்தோர் - நூலாராய்ச்சியு டையவர். உலகம் - உண்மையைக்கண்டுணரும் பெரியோர். மேதா வியர் - அறிவுடையவர்.

## ஆசாரியன்பெயர்.

ஆசாரியன் - ஒழுக்கமுடையவன். ஆசான்-ஆசாரியன். (ஆசா ர்யன். என்பது ஆசான் என விகாரமாயிற்று.) ஓசன் - வெளிப் படுத்துவோன். உபாத்தியாயன் - மாணவர்க்கு நூல்களைக் கற்பிப் பவன். பணிக்கன் - கல்விபயிற்றுபவன்.

## மாணுக்கன்பெயர்.

மாணுக்கன் - பாலியப்பருவமுடையவன். கற்போன் - கற்ற லுடையவன்.

## பண்டிதர்பெயர்.

அ. பண்டிதர் - மெய்யுணர்வுடையவர். கலைஞர்-கலைகளையறிந்தவர். மேதையர் - அறிவுடையவர். மூத்தோர்-அறிவான்முதிர்ந்தவர். கற்றவர் - நூல்களைப்படித்தவர். அவை - சபைக்குரியவர். விற்பன்னர் - கல்வியில் மேற்போனவர். கவிஞர் - சாதுரிய வருணனைகளைச் செய்பவர். சங்கம் - விசாரணையுடையவர். சாரதி - யாவரையுநடத்துவோன். சூரி - நற்செயலிற்செலுத்துவோன். சாடு - சொற்களைப் பிளந்துணரும் வன்மையுடையவன். புல்வர் - அறிவுடையவர். புதர் - அறிவுடையவர்.

## கலைஞர்பெயர்.

கலைஞர் - கலைகளையறிந்தவர். கவிவல்லோர் - கவிசெய்தலில் வல்லவர்.

## ஓத்துரைப்போர்பெயர்.

ஓத்துரைப்போர் - ஓதப்படுமவைகளையுரைப்பவர். கணக்காயர் - கல்வியாராய்வுடையவர்.

## மூத்தோன்பெயர்.

௯. மூத்தோன் — அறிவுமுதலியவற்ருல் முதிர்ந்தோன். குரவன் - கௌரவமுடையவன். ஐயன் - பூசிக்கத்தக்கவன். சுவாமி- பொருளுடையவன். கோமான் — பூமியையுடையவன். அடிகள் - அத்தன் - பொருளுடையவன். உரவோன்-அறிவுடையவன், வலிமையுடையவன். ஈசன் - ஆளுகையுடையவன். பதி - காப்பவன். இறை - உயர்ச்சியையுடையவன்.

## பெருமையிற் சிறந்தோன்பெயர்.

பெருமையிற்சிறந்தோன் - பெருமையால் மிக்கவன். குருசில்- கௌரவமுடையவன். அண்ணல் - எவராலுமடையப்படுபவன். ஏந்தல் - யாவரினும் மிக்கவன். தோன்றல் - உயர்ச்சியுடையவன். செம்மல் - நடுநிலைமையுடையவன்.

## எப்பொருட்குமிறைவன்பெயர்.

௪௦. நாதன்—எவரையும் விசாரணைசெய்வோன். கொழுநன் - கொழுமையுடையவன். காந்தன்-எவராலும் விரும்பப்படுவோன்.

பதி - காப்பவன். கோன் - செல்லுகையுடையவன். ஈசன் - ஆளுகையுடையவன். ஆதிபன்-மேலான பரிபாலனமுடையவன். அதிபன்-ஆதிபன். செம்மல் - நடுநிலைமையுடையவன். அரன் - தீங்குகளையழிப்பவன். பிரான் - எவராலுமடையப்படுவோன். ஆதி - முதன்மையுடையவன். மன்னன் - பெருமையுடையவன்.

## உயர்ந்தவர்பெயர்.

உலகம் - உண்மையைக்கண்டுணரும் அறிஞர்.

## திரண்டோர்பெயர்.

௧௧. திரண்டோர் - கூட்டமானவர். சவை - பலருங்கூடுதலாற்பிரகாசித்தலுடையது. சமவாயம் - கூடிவருதலுடையது. சங்கம் - பலருங்கூடுதலுடையது. சமுதாயம் - எவராலும் நன்கடையப்படுவது. சமூகம் - நல்லநியாயமுடையது. கோட்டி - பலவித சம்பாஷணையுடையது. அவை, குழாம் - சனங்களாற்குழுவாதலுடையது. குழு - கூடுதலுடையது. கூட்டம் - கூட்டப்படுவது. திரள் - கூடுதலுடையது. கணம் - மதிக்கப்படுவது.

## பெண்கள்கூட்டத்தின்பெயர்.

பண்ணை - விளையாட்டுடையது. ஓரை - ஓரைப்பாவைவிளையாட்டுடையது. பொய்தல் - விளையாட்டுடையது. ஆயம் - திரளானது. கெடவரல் - விளையாட்டுடையது.

## அரசன்பெயர்.

௧௨. அரசன் - உயிர்க்கினிமைசெய்பவன். புரவலன் - பூமியைக் காப்பவன். பெருமான் - பெருமையுடையவன். ஏந்தல் - யாவரினும் மிக்கவன். பூபாலன் - பூமியைக் காப்பவன். வேந்தன் - ஆணையை விதிப்பவன். மன்னன் - பெருமையுடையவன். நரபதி - மனிதரைக்காப்பவன். பொருநன் - போர்செய்பவன். சக்கிரி - தேசமுடையவன், ஆஞ்ஞாசக்கரமுடையவன். நிருபன் - மனிதரைக்காப்பவன். குருசில் - கௌரவமுடையவன். பார்த்திவன் - பூமியையாள்வோன். கோ-செல்லுகையுடையோன். கொற்றவன் - அரசியலுடையோன். இறைவன் - இறைபெறுபவன். அண்ணல்-எவராலுமடையப்படுவோன். தலைவன்-பெருமையுடையவன். காவலன் - பூமியைக் காப்பவன்.

## வீட்டுமன்பெயர்.

௧௩. வீட்டுமன் - பயங்கரமானவிரதமுடையவன். தெய்வவிரதன் - பிரமசரியவிரதமுடையவன். கங்கைதனயன் - கங்கா

நதியின் மகன். சந்தனுமுன்பெற்றோன் - சந்தனுவின் மூத்தமகன். பிரமசாரி - பிரமசரியவிரதமுடையவன். காங்கேயன் - கங்கையுடையமகன்.

## குருகுலவேந்தர்பேயர்.

குருகுலவேந்தர் - குருவென்னுமரசன்குலத்திற் பிறந்த அரசர். பாரதர் - பரதனென்னும் அரசன்மரபிலுள்ளவர். பௌரவர் - பூருவென்னுமரசன்மரபிலுள்ளவர். கௌரவர் - குருவென்னுமரசன் மரபிலுள்ளவர்.

## தருமன்பேயர்.

௧௪. தருமன் - தருமநெறியுடையவன். குவளைத்தாரான் - குவளைமாலையையுடையவன். யுதிட்டிரன் - போரிலே திடமாய்நிற்பவன். பொறையன் - பொறுமையுடையவன். முரசக்கொடியோன் - முரசமெழுதிய கொடியுடையவன். அறத்தின்சேய் - இயமனுடையமகன். பாண்டுமைந்தன் - பாண்டுவென்னுமரசனுக்கு மகன். குந்திபுதல்வன் - குந்தியுடைய மகன். மெய்ம்மைவிரதமாக்கொள்வோன் - உண்மையை உறுதியான விரதம்போலக் கொள்பவன்.

## துரியோதனன்பேயர்.

௧௫. துரியோதனன் - துக்கத்தோடு பொரப்படுவோன். காந்தாரிமைந்தன் - காந்தாரியுடையமகன். நந்தியாவர்த்தத்தாமன் - நந்தியாவர்த்தமாலையுடையவன். அரவுயர்த்தவன் - சர்ப்பக்கொடியுயர்த்தினவன். வணங்காமுடியினன் - யாரையும் வணங்காதமுடியுடையவன். அரசர்மன்னன் - இராசாதிராசன். சுயோதனன் - சுகத்தோடு பொருபவன். திருதராட்டிரன்செல்வன் - திருதராட்டிரனுடையமகன்.

## கன்னன்பேயர்.

௧௬. கன்னன் - குண்டலம்பொருந்திய காதுடையவன். (பிறக்கும்பொழுது குண்டலம்பொருந்திய காதோடு பிறந்தவன்.) கதிர்மதலை - சூரியன்மகன். கவசகுண்டலன் - கவசமுங் குண்டலமுமுடையவன். கச்சைக்கொடியினன் - கச்சைவரைந்த கொடியுடையவன். கச்சை - யானையின்நடுப்பாகத்தைப்பெரும்பாலும்மூடிக்கட்டுந்தோல். கானீனன் - கன்னிபெற்றபிள்ளை. அங்கர்கோமான் - அங்கதேசத்தார்க்கு அரசன்.

## வீமன்பேயர்.

வீமன் - பயங்கரவடிவமுடையவன். மடங்கற்கொடியோன் - சிங்கக்கொடியுடையவன். மாருதி - வாயுவின்மகன். இடிம்பை

கொழுநன் - இடிம்பையென்னும் அரக்கிக்கு நாயகன். கதாயுதன் - தண்டாயுதமுடையோன்.

## அருச்சுனன்பெயர்.

௧எ. அருச்சுனன் — தூயசெயலுடையவன். கிருட்டிணன் — கறுப்புநிறமுடையவன். பற்குனன் - உத்தரநாளிற் பிறந்தவன். தனஞ்சயன் — பகைபரசரைவென்றுபெற்ற திரவியமுடையவன். காண்டீவன் - காண்டீபமென்னும் வில்லுடையவன். சவ்வியசாசி - இடக்கையையும் பாணப்பிரயோகத்திலே ஆளுதலுடையவன். வீபற்சு - விசயம்பெறவேண்டும் என்னுஞ் சிந்தனை மேலிட்டவன். விசயன் - விசேஷவெற்றிபெறுபவன். பார்த்தன் - பிருதையுடைய மகன். கேசவற்குத்தோழன் - கண்ணபிரானுக்கு நண்பன். சுவேதவாகனன் - வெள்ளைக் குதிரைவாகனமுடையவன். கிரீடி - இந்திரனுவிடப்பட்ட கிரீடமுடையவன்.

## சேரன்பெயர்.

௧அ. சேரன் - சேரகுலமுடையவன், சேரம் என்னும் மலையுடையவன். வில்லவன் - விற்கொடியுடையவன். கொங்கன் - கொங்கதேசமுடையவன். வஞ்சிவேந்தன்-வஞ்சிநகருக்கு அரசன். போந்தின்றுரோன் - பனைமாலையுடையவன். கொல்லிவெற்பன் - கொல்லிமலையுடையவன். குடக்கோ - மேற்குத்தேசத் தலைவன். குட்டுவன் - குட்டநாடுடையவன். குடகன் - குடகநாடுடையவன். கோதை— உதியன்— வானவரம்பன்— மலையமான் - மலையமாநாடுடையவன். பொருநையாற்றுன் - பொருநைநதியுடையவன். சேரலன் - எவராலுமடையப்படுவோன்.

## சோழன்பெயர்.

௧௯. சோழன் - சோழகுலமுடையவன், சோழம் என்னுந் தேசமுடையவன். நேரியன் - நேரிமலையுடையவன். சென்னி - தலைமையுடையவன். பொன்னித்துறைவன் - காவேரிநதியுடையவன். நேரிவெற்பன் - நேரிமலையுடையவன். ஆரின்மாலையன் — ஆத்திமாலையுடையவன். கிள்ளி— அபயன் - பயமின்மையைச் செய்வோன். கோழிவேந்தன்-உறையூருக்குத்தலைவன். வளவன் — செல்வமுடையவன். செம்பியன் - சிபிச்சக்ரவர்த்தி மரபுடையவன். புலியுயர்த்தோன் - புலிக்கொடியை யுயர்த்தினவன். சூரியன் - சூரியமரபிற்பிறந்தவன். புனனாடன் - நீர்வளம்பொருந்திய நாடுடையவன். மால் - பெருமையுடையவன்.

## பாண்டியன்பெயர்.

உ0. பாண்டியன் - பாண்டியகுலமுடையோன், பாண்டிதேசமுடையவன். செழியன் - செல்வமுடையவன். கூடற்கோமான்-மதுரைக்கு அரசன். தென்னவன் - தென்னாடுடையவன். வேம்பின்றாரோன் - வேப்பமாலையுடையவன். வழுதி- குமரிச்சேர்ப்பன்-கன்னியாற்றங்கரைவரையுமாள்பவன். வைகையந்துறைவன்-வைகையாற்று வளமுடையவன். மாறன்- பொதியவெற்பன்-பொதியமலையுடையவன். மீனவன் - கயற்கொடியுடையவன். கைதவன்- பஞ்சவன் - கீர்த்தி விஸ்தாரமுடையவன். கௌரியன்-பகைவருக்குக் கேடுசெய்பவன்.

## குறுநிலமன்னர்பெயர்.

உக. குறுநிலமன்னர்-அற்பநிலமுடையசிற்றரசர். குறும்பர்- போர்செய்பவர். அரட்டர்- வேளிர்- புரோசர் - மிக்கசாமர்த்தியமுடையவர்.

## அமைச்சர்பெயர்.

அமைச்சர் - அரசனுக்கு அணிமையிலிருப்பவர். தேர்ச்சித்துணைவர்-ஆலோசனைக்குத் துணையாய்நிற்பவர். எண்ணர்-ஆலோசனையுடையவர். நூலோர்-ஆலோசனையுடையவர். சூழ்வோர் - ஆலோசனைசெய்பவர். உழையர் - அரசனுக்கு அணிமையிலிருப்பவர். மந்திரர் - ஆலோசனைக்குரியவர். முதுவர் - அறிவின் முதிர்ச்சியுடையவர். முன்னோர் - அரசனாலே முன்வைக்கப்படுவோர். அமாத்தியர் - அரசனுக்கு அணிமையிலிருப்பவர்.

ஆசிரியநிகண்டுகாரர் "ஆட்டர் குறும்பர் புரோசர் குறுநிலமன்னராம் வேளிரென்றும்பெயர்" என்றார். "ஆறிருமதியினெய்தியரட்டனையடர்த்து" என்றார் சிந்தாமணிகாரர்.

## படைத்தலைவன்பெயர்.

உஉ. படைத்தலைவன் - சேனைத்தலைவன். பொருநன்-போர்செய்பவன். சேனாபதி - சேனைக்குத்தலைவன்.

## நிமித்திகன்பெயர்.

நிமித்திகன் - வருங்காரியஞ் சொல்வோன். சாக்கை - உட்கருமங்கள் உசாவப்படுவோன். வள்ளுவன்-சிறப்புடையோன்.

## கணக்கர்வழியினுள்ளார்பெயர்.

கணக்கர்வழியினுள்ளார் - மந்திரவோலையெழுதுவோர் வழியினுள்ளார். காவிதியர் - காவிதிப்பட்டமுடையவர்.

## பரிவாரத்தின்பெயர்.

பரிவாரம் - சூழ்ந்துநிற்போர். பரியாளம்-சூழ்ந்துநிற்போர். உசாக்கையர் என்பது சாக்கையர் எனநின்றதுபோலும். "ஒன் றியமோனர்போலவுசாக்கையரொருங்குபோனார்." என்பது இர குவமிசம்.

## முதல்வள்ளலேழுவர்பெயர்.

௨௩. செம்பியன்- காரி- விராடன்-பிர சித்திபெற்றவன். நிருதி- துந்துமாரன்-துந்து என்னும் அசுரனைக்கொன்றவன். சகரன் - நஞ்சோடு பிறந்தவன். நளன் - பிரகாசமுடையவன்.

## இடைவள்ளலேழுவர்பெயர்.

அக்குரன் - குரூரமில்லாதவன். சந்திமான்- அந்தி மான்- சிசுபாலன் - குழந்தைகளைப் பாலனஞ்செய் வோன். வக்கிரன்- கன்னன்-(குண்டலமணிந்த) காது டையவன். சந்தன்-

முதல்வள்ளல் - தடையின்றி யாவர்க்குங் கொடுப்போன். ஆசிரியநிகண்டுகாரர் காரி என்னாது சகாரி என்பர். "அழிவிலாச் சகரன்சகாரிசெம்பியனிருதியணிநளன்றுந்துமாரனறைவிராடனெ ழுவர்" என்பது ஆசிரியநிகண்டு. சகாரி - சகனுக்குப் பகைவன்; இவன் விக்கிரமாதித்தன். விராடன் - மச்சதேசராசன். துந்து மாரன் - சூரியவமிசத்துக் குவலயாச்சுவனுடைய மகன். "அந்த மார்குவலயாச்சுவன்புதல்வனசுரதுந்துவைச்செயித்திடலாற்-றுந் துமாரனென்றியம்பிடும்பெயராய்த்துலங்கினன்" என்பதுபாகவ தம். "துந்துவெனுந்தானவனைச்சுடுசரத்தான்மாய்த்தானும்" என் பது இராமாயணம். புரஞ்சயன் என்னும் பெயரினனும் இவனே. சகரன் - சூரியவமிசத்தில் அசிதன்மகன்; இவன் தாய் கருப்பவதி யாயிருக்கும்போது அக்கருப்பம் அழியும்படி மாற்றவளால் இடப் பட்ட நஞ்சோடு பிருகுமுனிவருடைய கிருபையாற் கேடின்றிப் பிறந்தான் என்பது விட்டுணுபுராணம். நளன் - நிடதராசனாகிய வீரசேனன் மகன். இடைவள்ளல் - இரப்போர்க்குக் கொடுப் போன். அக்குரன் - கண்ணபிரானுடைய சிறியபிதா. சிசுபாலன் - தமகோஷன்மகன்; கண்ணபிரானுக்கு மைத்துனன். சந்தன் என் பதற்கு அரிச்சந்திரன் என்பாருமுளர்.

## கடைவள்ளலேழுவர்பெயர்.

௨௪. கடைவள்ளலெழுவர் - மத்திமக் கொடையாளரெழு வர். பாரி- ஆய்- எழிலி- நள்ளி- மலயன்- பேகன்- ஓரி.

262

## வைசியர்பெயர்.

உ௫. வைசியர்-தொழிலிற்பிரவேசிப்போர். இளங்கோக்கள்-இளவரசர். மன்னர்பின்னர்—அரசருக்குப் பின்வருணமுடையவர். இப்பர்— எட்டியர் - அரசராற் கொடுக்கப்படும் எட்டி என்னும் பட்டம் பெறுதற்குரியவர். நாய்கர் - தலைமையுடையவர். வணிகர் - வாணிகத்தொழிலுடையோர். ஆன்காவலர் - பசுக்காப்பவர். உழவர் - உழவுத்தொழிலுடையவர். பரதர் — பலரையுந் தாங்குதலுடையவர். விலைஞர் - பொருள்களை விற்பவர். செட்டியர், சிரேட்டியர்-சிரேட்டமுடையவர்.

## சூத்திரர்பெயர்.

உசு. சூத்திரர் - தொழிலிற் கிலேசமுறுவோர். மண்மகள்புதல்வர் — பூமிதேவிக்குப் புத்திரர். வளமையர் - செல்வமுடையவர், நிலவளமுடையவர். களமர் - நெல்விளைவிப்போர். சதுர்த்தர் - நான்காம் வருணமுடையவர். உழவர் - உழவுத்தொழிலுடையவர். மேழியர் - மேழிக்கொடியுடையவர். வேளாளர் - மண்ணினையாள்பவர். ஏரின்வாழ்நர்-ஏர்த்தொழிலாற் சீவிப்போர். காராளர் - மழையாற் பயன்பெறுவோர். விளைஞர் - தானியங்களை விளைவிப்பவர். பின்னவர் - பின்வருணமுடையவர்.

நச்சினார்க்கினியர் களமர் என்பதற்குக் களத்திற் செல்வோர் என்றும், வேளாளர் என்பதற்கு வேள் என்னும் பட்டவுரிமையையாள்பவர் என்றுங் கூறுவர். காராளர் என்பதற்கு மழையாலாகும் வெள்ளத்தை யாள்வோர் எனவும், அது பெருக்காளர் என்பதற்குச் சமபதம் எனவும், வேளாளர் என்பதும் அப்பொருளுடையது எனவுங் கூறுவாருமுளர். பெருக்காளர்—வேளாளர் என்பது பிங்கலநிகண்டு.

## மருத்துவர்பெயர்.

உஎ. மருத்துவர் - மருந்துசெய்வோர். பிடகர் - வைத்தியஞ்செய்பவர். ஆயுள்வேதியர் - ஆயுள்வேதவுணர்ச்சியுடையவர். மாமாத்திரர் - மேன்மையுடையவர்.

## குயவன்பெயர்.

கும்பகாரன் - குடஞ்செய்வோன். குலாலன் - மண்ணைக் கூட்டிச் சேர்ப்பவன். வேட்கோவன் - மண்ணுக்குப் பகைவன். சக்கிரி - திரிகைச்சக்கரமுடையவன். மட்பகைவன் - மண்ணுக்குப் பகைவன்.

மட்பகைவன் என்பதற்கு மண்ணைப் பிரிக்குங் கருவியுடையோன் எனக்கூறுவாருமுளர். மட்பகை - மண்ணைப்பிரிக்குங்கருவி என்பது பரிமேலழகருரை.

## சித்திரகாரர்பெயர்.

உஅ. சித்திரகாரர்—சித்திரஞ்செய்வோர். சிற்பர் - சிற்பசாத்திரத்தில் வல்லவர். ஓவியர் - சித்திரங்களையமைப்போர்-மோகர் - சித்திரத்தால் யாரையும் மயக்குவோர்.

## கண்ணுளர்பெயர்.

கண்ணுளர் - நோக்குவோர் கண்களை ஆள்பவர். சிற்பியர் - சிற்பசாத்திரம் வல்லவர். துவட்டர் - மரஞ்சீவியமைப்போர். தபதியர் - நிலைபெறுத்துவோர். அற்புதர் - அற்புதச்செயலுடையோர். யவனர்— கொல்லர்—கொற்றொழில்செய்வோர். அக்கசாலையர் - அக்கசாலையிற்றொழில்செய்வோர். புனைந்தோர் - அலங்கரிப்போர். கம்மியர் - தொழிலிடையருதோர். கண்ணுள்வினைஞர்— பார்ப்பவர் கண்ணுள்ளே தந்தொழிலை நிறுத்துவோர்.

## கோல்லர்பெயர்.

உகூ. கொல்லர் - கொற்றொழில்செய்வோர். கருமர் - தொழிலுடையவர். மனுவர்—

## தச்சன்பெயர்.

தச்சன் - மரஞ்சீவுவோன். மரவினையாளன் - மரத்திலே தொழில்செய்வோன். மயன் - அதிசயமான தொழிலுடையோன். தபதி - நிலைபெறுத்துவோன்.

## தட்டார்பெயர்.

தட்டார்-தட்டுந்தொழிலோர். பொற்கொல்லர், பொன்வினைமாக்கள்—பொன்னிலே தொழில்செய்யுமாக்கள். சொன்னகாரர்—பொன்னாற்பணிசெய்வோர். அக்கசாலையர்—பொன்செய்யுஞ் சாலையுடையவர்.

## சிற்பாசாரியர்பெயர்.

ஙo. சிற்பாசாரியர் - சிற்பநூல் வல்லவர். மண்ணீட்டாளர் - சுதைமண்ணாற் பாவைசெய்வோர், வேயாமாடம் முதலிய செய்வோர்.

## பொருளினையுருக்குந்தட்டார்பெயர்.

பொருளினையுருக்குந் தட்டார் - பொன்னையுருக்குந் தட்டார். பொன்செய்யும்புலவர் - பொன்னை அரித்தெடுக்கும் புலவர்.

## பணித்தட்டார்பெயர்.

பணித்தட்டார் - இரத்தினப்பணிசெய்வோர்.

## முத்தங்கோப்பார்பெயர்.

முத்தங்கோப்பார் - முத்துக்களைக் கோப்பவர். மணிகுயிற்றுநர் - மணியைப் பதிப்பவர்.

## கன்னார்பெயர்.

௩௧. கஞ்சகாரர் - வெண்கலத்திற் றொழில்செய்வோர். கன்னுவர்-

## அநாரியர்பெயர்.

அநாரியர் - பூசிக்கப்படாதவர். மிலேச்சர், மிலேச்சர் - திருந்தாத பேச்சுடையவர்.

## சோனகர்பெயர்.

சோனகர் - சோனகமென்னுந் தேசத்துக்குரியவர். யவனர் - யவனமென்னுந் தேசத்துக் குரியவர். உவச்சர்-

## உப்புவாணிகர்பெயர்.

உப்புவாணிகர் - உப்புவாணிகஞ் செய்வோர். உமணர் - உமண்சாதியார்.

## வண்ணார்பெயர்.

௩௨. வண்ணார் - புடைவையை நன்னிறமாக்குவோர். காழியர் - புடைவையைச் சுத்தஞ்செய்வோர். தூசர் - புடைவையைச் சுத்தமாக்குவோர். ஈரங்கோலியர்-சீலையில் ஈரத்தைச்சேர்ப்பவர். ஈரங்கொல்லியர் என்னும் பாடத்திற்கு சீலையின் ஈரத்தைக் கெடுப்போர்.

## நாவிதன்பெயர்.

நாவிதன் - எங்குஞ் செல்லுதற்குரிமையில்லாதவன். மஞ்சிகன் - கத்திக்கூடுடையவன். சிமங்கலி - மயிர்களைப் பிரித்துக் களைதலுடையவன். ஏனாதி-

## வேதகாரர்பெயர்.

வேதகாரர் - பிரம்பினாற் கூடைமுதலியன பின்னுவோர். பொருந்தர்- பொருந்துதலைச்செய்வோர்.

## நெய்வார்பெயர்.

காருகர் - நெய்தற்றொழில்செய்வோர்.

### துன்னர்பெயர்.

௩௩. துன்னர் - தைக்குந்தொழிலோர். பொல்லர் - தைக்குந்தொழிலோர்.

### தோற்றுன்னர்பெயர்.

தோற்றுன்னர் - தோல்தைப்பவர். செம்மார் - தோலிற்றொழில்செய்வோர்.

### கூவனூலோர்பெயர்.

கூவனூலோர் - கிணறுகுறிக்கும் நூலுடையோர். உல்லியர் - கிணறுகுறிப்போர்.

### சங்கறுப்போர்பெயர்.

சங்கறுப்போர் - சங்கரிவோர். வளைபோழ்நர் - சங்கரிவோர்.

### ஊன்விற்போர்பெயர்.

ஊன்விற்போர் - இறைச்சிவிற்பவர். சூனர் - கொலைத்தொழிலுடையவர்.

### தோல்வினைமாக்கள்பெயர்.

தோல்வினைமாக்கள் - தோலிற்றொழில்செய்வோர். பறம்பர் -

### சண்டாளர்பெயர்.

௩௪. சண்டாளர் - மிக்க கோபமுடையவர். கொலைஞர் - கொலைத்தொழில் செய்வோர். களைஞர் - உயிரைக் களைவோர். வங்கர் - கொடுமை செய்வோர். குணங்கர் - பேய்போல்பவர். மாதங்கர் - பெருந்துன்பஞ்செய்பவர். புலைஞர் - இழிதொழிலுடையோர். இழிஞர் - இழிவுடையவர்.

### பாணர்பெயர்.

பாணர் - பாடுவோர். சென்னியர் - மண்டைப்பாத்திரமுடையவர். வண்டர் - தொனிசெய்வோர். ஓவர் - சித்திரம்போல நிற்போர். வந்தித்துநிற்போர் - துதித்துநிற்போர். மதங்கர் - கேட்போரைமகிழ்விப்போர். சூதர் - புகழையுண்டாக்குவோர். பண்ணவர் - பண்ணுடையவர்.

### செக்கான்பெயர்.

௩௫. செக்கான் - செக்காட்டுவோன். சக்கிரி, நந்தி - செக்குடையவன்.

### கள்விற்போர்பெயர்.

சௌண்டிகர் - சுண்டிவிற்போர். (சுண்டி - கள்ளு.) துவசர் - கொடிகட்டியிருப்போர். பிழியர், படுவர் - கள்ளுவிற்போர்.

## மீகாமன்பெயர்.

மீகாமன் - தோணியின்மேற்செல்லுவோன். மீகான் - தோணியின்மேற் போவோன். மாலுமி- நீகான் - தோணிக் குத்தலைவன்.

## பண்ணுவார்பெயர்.

௩௬. பண்ணுவார் - குதிரையை அலங்கரிப்பவர். மாவலர் - குதிரைசெலுத்துதலில் வல்லவர். வதுவர், வாதுவர் - சண்டையில் வல்லவர்.

## யானைப்பாகர்பெயர்.

பாகர் - யானையைக் காப்பவர். ஆதோரணர் - யானையைச் சாதுரியமாக நடத்துவோர்.

## மெய்காப்பாளர்பெயர்.

மெய்காப்பாளர் - சரீரத்தைக் காப்போர். காவலர் - காத்தல்வல்லோர். கஞ்சுகி - சட்டையுடையவர்.

## உறைகாரர்பெயர்.

உறைகாரர் - படையுறைமுதலிய செய்வோர். காரோடர்-

## தேர்ப்பாகன்பெயர்.

௩௭. சூதன் – குதிரைகளைச் செலுத்துவோன். வலவன் – வன்மையுடையவன். சாரதி - குதிரைகளைச் செலுத்துவோன்.

## ஒற்றர்பெயர்.

ஒற்றர் - மறைந்தாராய்வோர். வேயர் - வேய்வுசெய்து ஆராய்வோர். சாரணர் - சஞ்சரிப்போர்.

## மடையர்பெயர்.

மடையர் - சோறுசமைப்போர். வல்லயிர் - உண்போர்க்குப் பிரியமுண்டாக்குவோர். கூவியர் - உண்பவரையழைப்பவர். பானசிகர், பாசகர் - பாகஞ்செய்வோர்.

## கூத்தர்பெயர்.

௩௮. நாடகர் - நடநஞ்செய்வோர். கண்ணுளாளர் - கூத்திற் பயிற்சியுடையவர். நடர் - கூத்தாடுவோர். வயிரியர் - ஊதுகொம்புடையவர். நிருத்தர் - கூத்தாடுவோர். கோடியர்-வேடத்தினாலே தம்மை அலங்கரிப்போர். பொருநர் - வேறொருவர்போலத் தம்மை வேஷத்தாற் காண்பிப்போர். அவிநயர் - கைமுதலியன காட்டும் பாவனையாற் பாட்டின் பொருளைக் காட்டுவோர்.

## தமிழ்க்கூத்தர்பெயர்.

வாயிலோர்-

## கழாயர்பெயர்.

கழாயர், வேழம்பர் - மூங்கிலிலேறிநின்றாடுவோர்.

## நரப்புக்கருவியாளர்பெயர்.

நக. நரப்புக்கருவியாளர் - யாழ்வாசிப்போர். குயிலுவர் - யாழ்வாசிப்போர்.

## தோற்கருவியாளர்பெயர்.

தோற்கருவியாளர் - தோலாற்செய்த வாச்சியத்தொழிலில் ஆட்சியுடையவர். இயவர் - வாச்சியமுடையோர்.

## வெறியாட்டாளன்பெயர்.

வெறியாட்டாளன் - வெறியாட்டுடையவன். தேவராளன் - தெய்வந் தன்மேல் வரும்படியாள்வோன்.

## தேவராட்டியின்பெயர்.

தேவராட்டி - தெய்வத்தையாள்பவள். சாலினி - சாலமுடையவள்.

## அயலவர்பெயர்.

அயலவர் - அயலாயுள்ளவர். கொதுமலாளர் - கொதுமலாயிருப்பவர். வம்பலர் - புதியரல்லாதவர்.

## புதியவர்பெயர்.

சo. விருந்தோர் - புதியவர். அதிதி - செல்பவன். வம்பலர் - நிலையின்மையுடையவர்.

## வழிச்செல்வோன்பெயர்.

பதிகன் – வழியிற்போவோன்.

## ஏவுவான்பெயர்.

வியவன் - ஏவலையுடையவன்.

## மூதுணர்ந்தோர்பெயர்.

மூதுணர்ந்தோர் - பழமையறிந்தவர்.

## உரியோர்பெயர்.

கிழவர் - உரிமையுடையவர்.

## குறிக்கோள்வோர்பெயர்.

குறிக்கொள்வோர் - ஒன்றைக்குறித்துத் தியானிப்பவர். பாராயணர் - பற்றிப்போகிறவர்.

## தூதர்பெயர்.

சக. தூதர் - சத்துருவைப் பரிதபிக்கச் செய்வோர். வித்தகர் - சொற்சாமர்த்தியமுடையவர். வினையுரைப்போர் - கருமங்களைச் சொல்வோர். வழியுரைப்போர் — தன்னரசன் சொன்னபடி சொல்வோர். பண்புரைப்போர் - குணங்களைச் சொல்வோர்.

## அடிமையின்பெயர்.

அடிமை - அடித்தொண்டுசெய்யுந் தன்மையுடையவர். தொத்து— கிணகர்— தாசர் — யசமானனுடைய காரியங்களைக் கவனமாகச்செய்வோர். தொழும்பு - தொழுது நிற்றலுடையவர். தொறு— விருத்தி-கூலிபெறுவோர். தொண்டு— பழமையாக வந்தவர். சேடர்—யசமானனாலனுப்பப்படுவோர். ஆள்— ஆளப்படுவோர்.

## தோழன்பெயர்.

சஉ. தோழன் - தொழுதுநிற்றலுடையவன். சிலதன் - குற்றேவலுக்குரியவன். நண்பன்-நண்புடையவன். பாங்கன் - பக்கத்திலே நிற்போன். சேடன் - அனுப்பப்படுவோன். துணைவன் - துணையாயுள்ளவன். எலுவன் - தோழமையுடையவன்.

## தோழன் முன்னிலைப்பெயர்.

ஏடா—

## தோழியின்பெயர்.

தோழி - தொழுதுநிற்றலுடையவள். சிலதி - குற்றேவலுக்குரியவள். சகி - கூடநிற்பவள். பாங்கி - பக்கத்திலே நிற்பவள். சேடி-அனுப்பப்படுபவள். இகுளை—

## தோழி முன்னிலைப்பெயர்.

ஏடி— எல்லா—

## குருடன்பெயர்.

சங. அந்தகன் - இருளையேகாண்போன். சிதடன்—

## கூனின்பெயர்.

கோணல் - வளைவுடையது.

## குறளின்பெயர்.

குறள், சிந்து - குறுமையானவடிவுடையது. வாமனம் - அழகுடையது. குஞ்சம்—குறளுடையது.

## செவிட்டின்பெயர்.

செவிடு - செவியிற் குற்றமுடையது. வதிர் - கேள்வியடைபட்டவன்.

## மூடவன்பெயர்.

மூடவன் - உறுப்பிற் குற்றமுடையோன். பங்கு - உறுப்பிற் பங்கமுடையவன். குணி - உறுப்பிற் குற்றமுள்ளவன்.

## ஊமையின்பெயர்.

ஊமை - பேச இயலாது ஊம் என்று தொனி செய்வோன். மூகை, மூங்கை - பேச்சுத்தடையுடையவன்.

## அலியின்பெயர்.

அலி - ஆண்பெண்ணல்லாதது. பண்டகன் - நாணத்தினால் வேற்றிடம் போவோன். பேடி-பேய்த்தன்மையுடையது. நபுஞ்சுகன் - ஆண்பெண்ணல்லாதவன். சண்டன் - அமைதியுடையவன்.

## கொலையாளியின்பெயர்.

சுச. காதகன் - கொலைத்தொழிலுடையோன். சாருகன் - பீடைசெய்வோன்.

## வேதனைசெய்வோன்பெயர்.

வேதனைசெய்வோன் - வருத்தஞ்செய்வோன். அருந்துதன் - புண்படக்குடைவோன்.

## அச்சமுள்ளோன்பெயர்.

அச்சமுள்ளோன் - பயமுள்ளோன். பீதன் - பயமுடையோன். சகிதன் - பொறுமையுடையவன். பீரு-பயமுடையவன்.

## வேகியின்பெயர்.

வேகி - வேகமுடையோன். சவனன்-மிக்ககதியுடையவன்.

## வஞ்சகன்பெயர்.

வஞ்சகன் - கபடமுடையவன். நிசாதன் - பாவமுடையவன்.

## தூர்த்தர்பெயர்.

சரு. தூர்த்தர் - பரதாரத்தை வஞ்சித்துப் பிடிப்பவர். பல்லவர் - உறுதியில்லாதவர். பரத்தர் - பிறன்மனைவியைச் சேர்வோர். இடங்கழியர் - இடத்தினின்று கழிக்கப்படுவோர். விடர் - அணைப்புதலுடையவர். காமுகர் - மிக்கவிருப்புடையர்.

### நாகரிகர்பெயர்.

நாகரிகர் - நாகரிகமுடையவர். சதுரர் - சாமர்த்தியமுடையவர். காமுகர் - விரும்பப்படுவோர்.

### கிராமமுற்றேன்பெயர்.

கிராமியன் - கிராமத்திலிருப்போன்.

### வல்லோன்பெயர்.

௪௬. வலவை - வன்மையுடையோன். வல்லுநன் - வல்லமையுடையவன்.

### மாட்டார்பெயர்.

மாட்டார்-வன்மையில்லாதவர். வல்லார்-வல்லவராகாதவர்.

### குலமுளோன்பெயர்.

குலீனன் - நற்குலமுடையவன்.

### கரியவன்பெயர்.

கரியவன் - கருநிறமுடையோன். கள்வன் - கருநிறமுடையவன்.

### நோயுற்றேழிந்தோன்பெயர்.

நோயுற்றெழிந்தோன் - நோயடைந்து நீங்கினவன். உல்லாகன் - நோய்நீங்கி வன்மைபெற்றவன்.

### காலாளின்பெயர்.

காலாள் - காலாற்செல்லுவது. பதாதி - காலாற்செல்வது.

### ஆயத்தமானேன்பெயர்.

ஆயத்தமானேன் - போருக்கு முயற்சியுள்ளவன். சந்நத்தன் - சட்டைபூண்டு நிற்போன்.

### கூர்மையில்லோன்பெயர்.

௪எ. மந்தன் - கூரியபுத்தியில்லாதவன்.

### நிர்வாணியின்பெயர்.

நிர்வாணி-வஸ்திரமில்லாதவன். நக்கன்-வெட்கமுடையவன்.

### மிகுபுகழாளன்பெயர்.

இயவுள் - செல்லுகையுடையோன்.

### அருளோன்பெயர்.

காருண்ணியன் - கருணையுடையவன்.

## கடிகைமாக்கள்பெயர்.

கடிகைமாக்கள் - நாழிகையறிவிப்போர். எட்டர் - விருப்பத்தைக் கொடுப்பவர். வந்திகள் - துதிசொல்வோர். கவிகள் - புகழ்ந்து பாடுவோர். கற்றோர் - மங்கலகவிகளைக் கற்றவர். வண்டர் - தொனிசெய்வோர்.

## கோடையுளோன்பெயர்.

௪௮. புரவலன் - கொடையுடையவன். ஈகையாளன் - கொடையாளி. வேளாளன் - கொடையாளி. தியாகி - (பொருளைப் பிறரிடம்) விடுதலுடையவன். வேள்வியாளன் - கொடையாளி. உபகாரி - உபகாரமுடையவன்.

## வரைவறக்கோடுத்தளிப்போன்பெயர்.

வரைவறக் கொடுத்தளிப்போன் - வரைவின்றிக் கொடுத்துக் காப்போன். வள்ளியோன் - பெருங் கொடையாளன்.

## ஏற்போன்பெயர்.

இரவலன் - இரத்தற்றொழிலுடையோன். பரிசிலாளன்-பெற்றதனையாள்வோன். யாசகன் - பிரார்த்தித்துக் கேட்போன். தீனன் - கேடுடையவன்.

புரவலன் என்பதற்குப் புரத்தல்வல்லன் எனவும், இரவலன் என்பதற்கு இரத்தல்வல்லன் எனவும் நச்சினார்க்கினியர் கூறுவர்.

## திருடர்பெயர்.

௪௯. கரவடர் - கபடமுடையவர். சோரர் - திருடுதலுடையவர். தேனர் - திருடுவோர். பட்டிகர் - களவுசெய்பவர். புரையோர் - குற்றமுடையோர். கள்வர் - களவுசெய்பவர்.

## தரித்திரன்பெயர்.

தரித்திரன் - கேடான நிலையுடையவன். அகிஞ்சனன் - சிறிதும் பொருளில்லாதவன். தீனன் - கேடுடையவன். பேதை - பேய்போல எண்ணப்படுவோன். நல்கூர்ந்தோன் - நல்குரவடைந்தோன். வறியன் - வறுமையுடையவன். ஆதுலன் - நோயுடையவன். ஏழை - இகழப்படுவோன். இலம்பாட்டோன் - பொருளின்மையுடையவன். மிடியன் - வறுமையுடையவன்.

## திண்ணியன்பெயர்.

௫௰. திண்ணியன் - திண்மையுடையவன். வயவன்; திறலோன் - வலிமையுடையவன். வண்டன்— மிண்டன் -

மீண்டுதலுடையவன். மள்ளன் - வலிமையுடையவன். வியவன் - ஏவலுடையவன். விறலோன், மீளி - வலிமையுடையவன். வீரன் - வீரமுடையவன்.

## தானைத்தலைவர்பெயர்.

தானைத்தலைவர் - சேனைக்குத் தலைவர். கூளியர், எருளர் - இடபம்போலும் வலிமையுடையவர். வாளுழவர் - வாளாற்றொழில்செய்வோர். மள்ளர், மறவர் - வலிமையுடையவர். படர் - போர் செய்பவர்.

## பகைவர்பெயர்.

ருக. பகைவர் - பிரிவுடையோர். அரிகள் - போருக்கு வருவோர். செறுநர் - செறுதலுடையவர். சேரார் - சேராதவர். அமரார் - விரும்பாதவர். உள்ளார் - நினையாதவர். நள்ளார் - நண்பு செய்யாதவர். மருவலர் - பொருந்தாதவர். தெவ்வர் - பகையுடையவர். மாணர் - மாட்சிமைப்படாதவர். மாற்றலர் - மாறுபாடுடையவர். மன்னார், ஒன்னார் - பொருந்தாதவர். தரியலர் - தரியாதவர். ஒட்டார் - சேராதவர். வட்கார் - கோபம் மழுங்காதவர், நாணமுடையவர். சார்பிலார் - பற்றில்லாதவர். பற்றார் - பற்றுதலில்லாதவர். செற்றார் - செறுதலுடையவர். பரர் - கொல்லத்திரிவோர். கேளார் - கேளாதவர். ஒல்லார் - பொருந்தாதவர்.

## மேவினர்பெயர்.

ருஉ. மேவினர் - விரும்பினவர். ஒல்லுநர் - பொருந்துதலுடையவர். தொடர்ந்தார் - தொடர்தலுடையவர். சேர்ந்தார் - சேர்ந்தவர். ஒட்டுநர் - சேர்தலுடையவர். பெட்டார் - விருப்பமுடையவர். வேட்டார் - வேட்கையுடையவர். புல்லுநர் - தழுவுதலுடையவர். பசைந்தார் - அன்புடையவர். மித்திரர் - சிநேகஞ்செய்வோர். புரிந்தார் - அன்புசெய்வோர். ஆர்வலர் - விருப்பமுடையவர். விழைந்தார் - விரும்பினவர். நல்லவர் - நன்மைசெய்பவர். காதலித்தார் - விரும்பினவர். நள்ளுநர் - நட்புடையவர். நயந்தார் - விரும்பினவர். கூட்டம் - கூடுதலுடையவர். ஒன்றுநர் - பொருந்துதலுடையவர்.

## சுற்றத்தின்பெயர்.

ருங. சுற்றம் - சூழவிருப்போர். உற்றவர் - சேர்ந்தவர். இருளை, நட்டோர் - நண்புடையவர். உறவு - சேர்வுடையவர். ஒக்கல் - ஒத்துநடப்பவர். கிளை - கிளைபோல்பவர். சார்ந்தோர் - பற்றுதலுடை

யவர். பற்றினர் - பற்றுடையவர். சிறந்தோர் -மிக்கவர். நண்பு - நட்டலுடையவர். பந்தம்-பிரியஞ்செய்பவர். பரிசனம்-சூழவிருக்குஞ்சனம். கேள் - உரிமையுடையோர். நண்பு — சிநேகமுடையவர். கூளி, குடும்பம் - தாங்குவோர். கடும்பு - காத்தலுடையவர். நள்ளி - நண்புடையவர். பாசனம்—

## கீழோர்பெயர்.

௫௪. பொறியிலார் - நல்வினையில்லாதவர். கயவர் - ஒழுக்கந்தவறினவர். நீசர் - நீசத்தன்மையுடையவர். புள்ளுவர் - வஞ்சகமுடையவர். புல்லர் - புன்மையுடையவர். தீயோர் - தீமைசெய்பவர். சிறியசிந்தையர் — அற்பவெண்ணமுடையவர். கனிட்டர் — சிறுமையுடையவர். தீக்குணர் — துர்க்குணமுடையவர். தீம்பர் — தீங்குடையவர். தேரார் - அறிவில்லாதவர். முறையிலார் - நீதியில்லாதவர். முசுண்டர், மூர்க்கர் - மோகமுடையவர். முசுடர், பல்லவர் - நிலையற்றவர். கையர் - சிறுமையுடையவர். கலர் - தருமநெறியினின்று விலகினவர்.

## அறிவிலான்பெயர்.

௫௫. அறிவிலான் - அறிவில்லாதவன். முழுமகன் - அறிவு நுழைதற்கேற்ற புரையில்லாத மகன். சிதடன் - அறிவுகுருடானவன். பேதை - பேய்த்தனமுடையவன். மூடன் - மயக்கமுடையவன். மண்ணை - பேய்போல்பவன். அஞ்ஞை - அறிவில்லாதவன். இழுதை - இழுக்குடையவன். மடன் - அறிவில்லாதவன். ஆதன் - கோபமுள்ளவன். ஏழை - இகழப்படுவோன்.

## தொழில்செய்வோர்பெயர்.

தொழுவர் - தொழுதலுடையவர். கம்மியர் - தொழிலுடையவர்.

## வாயில்காப்போர்பெயர்.

வாயிலாளர் - வாயிலிலே நிற்றலுடையவர்.

## பெண்பெயர்.

௫௬. பெண் - விரும்பப்படுபவள். அரிவை— அங்கனை - நல்லுறுப்புடையவள். மடந்தை - அறியாமையுடையவள். ஆடவள்— ஆட்டி— மாயோள் - மாயமுடையவள். சுரிகுழல்—சுரித்தகூந்தலுடையவள். மகடூஉ— காந்தை - விரும்பப்படுபவள். சுந்தரி - அழகுடையவள். வனிதை - புருடனையடைப்வள். மாது - அழகுடையவள். தெரிவை — தெரிந்

துகொள்ளப்படுபவள். மானினி - மானமுடையவள். நல்லாள் - சிறப்புடையவள். சிறுமி - சிறுமையுடையவள். தையல் - தன்னை யலங்கரிப்பவள். நாரி - புருடனை வசப்படுத்துபவள். பிரியை-பிரி யஞ்செய்பவள். காரிகை - அழகுடையவள். அணங்கு-பெருமையு டையவள். பிணா, பெண்டு - விரும்பப்படுபவள். பேதை - பேய்த் தனமுடையவள்.

## புருடன்பெயர்.

௫எ. புருடன் - பிராணிகளைக் காப்பவன். ஆடவன் - வெற் றிபெறுதற்குரியவன். மைந்தன் - வலிமையுடையவன். காளை - காளைபோல்பவன். ஆடூஉ - வெற்றிபெறுதற்குரியவன். மகன்—

புமான் - பிறரைக்காப்பவன். குமரன் - குற்றங்களைக் கெ டுப்போன்.

## ஆணைச்சிறப்பிக்கும்பெயர்.

நம்பி - நமக்கு இன்னன் என வியந்து சொல்லப்படுவோன்.

## பெண்ணைச்சிறப்பிக்கும்பெயர்.

நங்கை - நமக்கு இன்னள் என வியந்து சொல்லப்படுபவள்.

## கைம்மைபெற்றேன்பெயர்.

௫அ. கோளகன் - மறைவாகக் காக்கப்படுவோன்.

## வேற்றேற்குப் பெற்றபிள்ளையின்பெயர்.

குண்டகன் - பெண்ணின் குலத்தைஅழிப்பவன்.

## கன்னிபெற்றபிள்ளையின்பெயர்

கானீனன் - கன்னியிடம் பிறந்தவன்.

## நாற்குலத்துளுயர்குலத்தாணுமிழிகுலப்பெண்ணுங் கூடிப்பெற்ற பிள்ளையின்பெயர்.

௫௦. அநுலோமன் - கிரமமான கலப்பிற் பிறந்தவன்.

## உயர்குலப்பெண்ணுமிழிகுலத்தாணுங் கூடிப் பெற்ற பிள்ளையின்பெயர்.

பிரதிலோமன் - கிரமமற்ற கலப்பிற் பிறந்தவன்.

## அநுலோமத்தாணும் பிரதிலோமப்பெண்ணுங் கூடிப் பெற்ற பிள்ளையின்பெயர்.

௬௧. அந்தராளன் - கலப்புவருணமுடையவன்.

## அநுலோமப்பெண்ணும் பிரதிலோமத்தாணுங் கூடிப் பெற்ற பிள்ளையின்பெயர்.

விராத்தியன் - விலக்கப்படுவோன்.

## தலைவிபெயர்.

௬௨. தலைவி-பெருமையுடையவள். குரத்தி-கௌரவமுடையவள். அத்தை - செல்வமுடையவள். முதல்வி - முதன்மையுடையவள். கோமாட்டி - கோமானுக்குரியவள். ஆசாள் - ஒழுக்கமுடையவள். இறைவி - தலைமையுடையவள். ஐயை - பூசிக்கப்படுபவள். சாமி - செல்வமுடையவள்.

## நோற்பாள்பெயர்.

நோற்பாள் - தவஞ்செய்பவள்— கந்தி— ஔவை— அம்மை— கன்னி— கவுந்தி.

## அமங்கலையின்பெயர்.

௬௩. அமங்கலை - மங்கலமில்லாதவள். கைம்மை, கைனி - சிறுமையுடையவள். கலன்கழிமடந்தை -ஆபரணங் கழித்தற்குரிய பெண். விதவை - நாயகனில்லாதவள்.

## மலடியின்பெயர்.

மலடி, மைம்மை — பிள்ளையின்மையாகிய குற்றமுள்ளவள். வந்தி - கருப்பந் தடையாதலுடையவள்.

## கோலஞ்செய்வாள்பெயர்.

கோலஞ்செய்வாள் - அழகுசெய்பவள். வண்ணமகள் - அலங்காரஞ் செய்யுமகள்.

## வேசையின்பெயர்.

௬௪. வேசை - பலவித வேஷங்களைத் தரிப்பவள். பரத்தை - பிறனைப் புணர்பவள். கணிகை - தூர்த்த கணங்களையுடையவள். சூளை - வஞ்சினமுடையவள். பயனிலாள் - பிரயோசனமில்லாதவள். வரைவின் மாது - விவாகமில்லாத பெண். பொருட்பெண்டு- பொருளை விரும்பும் பெண். பெறுவகொள்வாள் - காமுகர் பெறுபவைகளைக் கவர்ந்துகொள்பவள். விலைமகள் - தன் போகத்தை விற்கும் பெண்.

## மூத்தாள்பெயர்.

விருத்தை - இளமையில்லாதவள்.

## குமரியின்பெயர்.

குமரி - இளம்பருவமுடையவள். கன்னி - விரும்பப்படுப வள், பிரகாசமுள்ளவள்.

## நாடகக்கணிகையின்பெயர்.

நாடகக்கணிகை-நாட்டியஞ்செய்யுங் கணிகை. நிருத்தமாது- நிருத்தஞ்செய்யும் பெண். சூத்தி - கூத்தாடுபவள்.

குமரி என்பதைக் குமாரி என்னும் ஆரியபதத்தினின்று வந்த தாகக் கொண்டு கிரீடைக்குத் தக்கவள் எனப் பொருள்கூறினும் பொருந்தும்.

## அசதியின்பெயர்.

கூ௫. அசதி - கற்பில்லாதவள், சோரநாயகனோடு கூட்டி விடுபவள். குட்டினி-குடும்பத்தைக் கெடுப்பவள். தொழுத்தை - தொழுதுநிற்குந் தன்மையுடையவள். கூளி- குறளி - சிறுமையுடையவள். படுவி - சாமர்த்தியமுடையவள். குண்டம்- துட்டை - தீங்குடையவள்.

## பதினாறுண்டிற் பெண்பெயர்.

யுவதி - புருடனுடன் கூடினவள்.

## பாடுவிச்சியின்பெயர்.

மதங்கி-மகிழ்விப்பவள், மத்தளமுடையவள். விறலி-விறல் படப் பாடுபவள்.

## தம்பதியின்பெயர்.

தம்பதி, இரட்டை - பெண்ணுமாணுமாகிய இருவர். ஆண் பெண் - ஆணும் பெண்ணுமாகியவிருவர்.

## குறிஞ்சிநிலமாக்கள்பெயர்.

கூசு. குறவர் - குறும்புசெய்பவர். கானவர் - காட்டில் வசி ப்பவர். மள்ளர் - வலிமையுடையவர். குன்றவர் - மலையிற் சஞ்ச ரிப்பவர். புனவர் - புனங்களைக் காப்பவர். இறவுளர் - குறிஞ்சி நிலத்தில் வசிப்பவர்.

## குறிஞ்சிநிலப்பெண்பெயர்.

குறத்தி- கொடிச்சி-

## குறிஞ்சிநிலத்திறைவன்பெயர்.

மலையன்— வெற்பன்— சிலம்பன்— கானகநாடன்—

கானகநாடன் என்பதற்குக் காட்டிற்குள்ளாகிய நாடுடை யோன் என்பர் நச்சினார்க்கினியர்.

## பாலைநிலமாக்கள்பெயர்.

சுஎ. மறவர் - பாவத்தொழிலுடையவர். எயினர் - எயின்கு டியிலுள்ளவர். புள்ளுவர் - கபடமுடையவர். இதற்குப் பொதுப் புள்ளிஞேசையைத் தம்மிடமுடையவர் என்பர் நச்சினார்க்கினியர். இறுக்கர்—

## பாலைநிலப்பெண்பெயர்.

எயிற்றி— வன்கட்பிணா - கொடுந்தொழிலுடைய பெண். மறத்தி—

## பாலைநிலத்தலைவன்பெயர்.

மீளி— காளை— விடலை—

## புளிஞர்பொதுப்பெயர்.

சுஅ. புளிஞர் - மிக்கபெலமுடையவர். குறவர்— மாகுலவர்— குன்றவர்— கிராதர் - கி என்னுந் தொனியுடன் பறவைகளை அழைப்பவர். மறவர்— கானவர்— வனசரர் - காட்டிற்சஞ்சரிப்போர். சவரர் - காட்டி லிருந்துகத்துவோர். கொலைஞர்-கொலைத்தொழிலுடையவர். பாவமூர்த்திகள் - பாவசரீரமுடையவர். முருடர் - நேர்மையில்லாதவர். பொறையிலார் - பொறுமையில்லாதவர். எயினர்— வேடர்— வேட்டைத்தொழிலுடையவர்.

## முல்லைநிலமாக்கள்பெயர்.

சுகூ. முல்லையர் - முல்லைநிலமுடையவர். பொதுவர்-பொது வானவர். அண்டர், கோவிந்தர் - பசுக்களை அடைபவர். ஆன்வல்லவர் - பசுக்காத்தலில் வல்லவர். குடவர் - பசுக்களையுடையவர். பாலர் - பசுக்களைக்காப்பவர். கோவலர் - பசுக்காத்தலில் வல்லவர். கோபாலர் - பசுக்காப்பவர். அமுதர் - பால் என்னும் அமுத முடைபவர். ஆயர் - பசுத்திரளைக் காப்பவர். தொறுவர் - பசுக்களையுடையவர். இடையர் - பசுக்காப்பவர். (இடை - பசு.)

அமரநிகண்டிலே வல்லவர் என்பதும் இடையர்பெயர். வல்லவர் - தைரியமில்லாதவர்.

## முல்லைநிலப்பெண்பெயர்.

எ0. தோறுவி- பொதுவி- ஆய்ச்சி- குடத்தி- இடைச்சி-

## முல்லைநிலத்தலைவன்பெயர்.

கானநாடன்- குறும்பொறைநாடன்- அண்ணல்- தோன்றல்-

## மருதநிலமாக்கள்பெயர்.

எக. களமர் - நெல்விளைப்போர். இதற்கு நெற்களத்திலே தொழில் செய்பவர் என்பர் நச்சினார்க்கினியர். தொழுவர்-தொழில் செய்பவர். மள்ளர், கம்பளர் - ஆரவாரமுடையவர். உழவர் -உழு தொழிலுடையவர். விளைஞர் - நெல்விளைவிப்போர். கடைஞர் - கடைக்குலமுடையவர்.

## மருதநிலப்பெண்பெயர்.

கடைச்சி- ஆற்றுக்காலாட்டி-

## மருதநிலத்தலைவன்பெயர்.

மகிழ்நன்- ஊரன்- கிழவன்-

## நெய்தனிலமாக்கள்பெயர்.

எ௨. பரதவர்- நுளையர்- பஃறியர் - தோணியிற்றொழிலுடையவர். திமிலர்-தோணியிற்றொழில்செய்பவர். சாலர் - வலைவீசுந்தொழிலுடையவர். கடலர் - கடலிற்றொழில் செய்பவர். கழியர் - கழிநிலத்துச் சஞ்சரிப்போர்.

## நெய்தனிலப்பெண்பெயர்.

பரத்தி- நுளைச்சி- அளத்தி- கடற்பிணா-

## நெய்தனிலத்தலைவன்பெயர்.

எ௩. கொண்கன்- துறைவன்-கடற்றுறையிற்சஞ்சரிப்போன். மெல்லம்புலம்பன் - மெல்லிய கழிநிலமுடையவன். கடற்சேர்ப்பன் - கடற்கரையில் வசிப்போன்.

## உப்பமைப்போர்பெயர்.

அளவர் - உப்பளத்திற்றொழில்செய்வோர். உமணர் - உமண் சாதியிலுள்ளவர்.

## பாட்டன்பெயர்.

எ௪. தாதைதன்றாதை - பிதாவுடைய பிதா. மூதாதை - மூத்தபிதா. பிதாமகன் - பிதாவுடையபிதா.

## ஈன்றவன்பெயர்.

தாதை - குலத்தைப்பெருக்குவோன். அப்பன்-ஐயன் - வணங்கப்படத் தக்கவன். தந்தை - தமக்கு இன்னன் என உயர்த்தப்படுவோன். அம்மான் - பெரியவன். அத்தன் - பொருளுடையவன். பிதா - காப்பவன்.

## ஈன்றவள்பெயர்.

எகூ. அவ்வை- அம்மனை- பயந்தாள்- அம்மை- யாய்- அன்னை- ஆயி-பூசிக்கத்தக்கவள். மோய்- தாய்-

## வளர்த்ததாதியின்பெயர்.

செவிலி- கோடாய்- கைத்தாய்-

## முன்பிறந்தாள்பெயர்.

தவ்வை- சேட்டை-

## தங்கையின்பெயர்.

பின்னை-

## தங்குடிச்சுற்றத்தின்பெயர்.

எஎ. ஞாதியர் - தம்மவரென்றறியப்படுபவர். தாயத்தார் - உரிமைபெறுப்வர்.

## மாமன்பெயர்.

மாதுலன் - மாதாவுடன்பிறந்தவன். அம்மான் - பெரியவன்.

## ஓர்குடியிற்கொண்டோன்பெயர்.

சகலன் - மனைவியின் சகோதரிக்கு நாயகன்.

## மூத்தோன்பெயர்.

சேட்டன் - மூப்புடையவன். தம்முன்- முன்னவன்-முன்பிறந்தவன். அண்ணன் - மேன்மையுடையவன்.

## பின்னோன்பெயர்.

இளவல் - இளமையுடையவன். பின் - பின்பிறந்தோன். அநுசன் - பின்பிறந்தோன். கனிட்டன் - வயசிற்குறைந்தவன்.

## காதலன்பெயர்.

எஅ. காதலன் - விரும்பப்படுபவன். கணவன்- கொழுநன்- வேட்டோன் — விவாகஞ்செய்தவன். கண்டன்- வல்லவன் - பிரியமுள்ளவன். பத்தா - குடும்பத்தைப் பேணுபவன். துணைவன் - துணையாயுள்ளவன். தலைவன் - தலைமையுடையவன். கொண்கன்- தவன் - மனைவியை

நடுங்கச் செய்வோன். காந்தன் - விரும்பப்படுவோன். மணமகன் - விவாகமுடைய புருடன். உரியோன் - குடும்பத்திற்குரியவன். அன்பன் - அன்புடையோன். மணவாளன் - விவாகமுடையவன். பதி-குடும்பத்தைக் காப்பவன். கேள்வன் - உறவுடையவன். நாயகன் - குடும்பத்தை நடத்துவோன்.

## தேவிபெயர்.

எகூ. தேவி - கிரீடைக்குரியவள். இல்லவள் - மனைக்குரியவள். உரிமை - நாயகனுக்குரியவள். பன்னி - நாயகனையுடையவள். குடும்பினி - குடும்பத்தலைவி. இல்-இல்லமுடையவள். இல்லாள் - மனையுடையவள். வல்லவை - பிரியமுள்ளவள். களம் - மென்மையுடையவள். தாரம் - நாயகன் பயப்படச்செய்பவள். மனையாட்டி - மனையுடையவள். மனை - இல்லமுடையவள். விருந்தம் - மகிழ்விப்பவள். பாரி - குடும்பத்தை வளர்ப்பவள். வாழ்க்கைத்துணை - வாழ்வுக்குத் துணையாயுள்ளவள். களத்திரம் - மென்மையுடையவள். காந்தை, காதலி - விரும்பப்படுவள். நாயகி - குடும்பத்தை நடத்துபவள்.

## மகன்பெயர்.

அo. சந்ததி-குலத்தை வளர்ப்போன். மதலை— குனு— பிறப்பிக்கப்பட்டவன். தனயன் - குலத்தை வளர்ப்பவன். காதலன்-விரும்பப்படுவோன். மெய்யன் - சரீரசம்பந்தமுடையவன். நந்தனன்-பெற்றாரை மகிழ்விப்போன். சிறுவன்-சிறுமையுடையவன். தோன்றல் - தோற்றமுடையவன். குட்டன் - சிறுமையுடையவன். செம்மல் - செம்மையுடையவன். மருமான்— பிள்ளை— முளை— சுதன் - பிறப்பிக்கப்பட்டவன். புதல்வன்— புத்திரன் - புத்தென்னும் நரகிற் செல்லாது பிதாவைக்காப்போன். மைந்தன் - வலிமையுடையவன். கால் - வமிசத்திற்கு அடியாயுள்ளவன். பொருள்-செல்வம்போன்றவன். சேய்-செம்மையுடையவன். எச்சம்-எஞ்சிநிற்பவன். வழி-வமிசத்திற்கு வழியாக நிற்பவன். பிறங்கடை - உயர்வடைபவன்.

## புதல்விபெயர்.

அக. சிறுவி— புத்திரி— தனயை— ஐயை-பூசிக்கத்தக்கவள். பந்தனை-கட்டுப்பாடுடையவள். மகள்— சுதை - பிறப்பிக்கப்பட்டவள்.

## மகன் மகள் என்னும் இருபாற்கும் பொதுப்பெயர்.

எச்சம்—எஞ்சிநிற்பவர்.

## பிள்ளைப்பன்மையின்பெயர்.

குறுமக்கள் - சிறுபிள்ளைகள். மகார் - இளமையுடையவர். சிறார் - சிறுமையுடையவர்.

## படையின்பெயர்.

அ௨. படை - போரில்விருப்புடையது. தானை— பதாதி - காலாற்செல்வது. தந்திரம்— தளம்— தண்டம்-போர்பயிற்றப்படுவது. வானி— ககனம்— யூகம்-போர்செய்வது. வாகினி-குதிரைமுதலிய கூட்டமுடையது. அனீகம்— பாடி— சேனை— கவனம்— பலம்— பரிகலம்— பதாகினி - காலாற்செல்வது.

## படைவகுப்பின்பெயர்.

அ௩. அணி— உண்டை— ஒட்டு— யூகம்—

## படையுறுப்பின்பெயர்.

அணி— நெற்றி— கை— தூசி—

## பின்னணியின்பெயர்.

கூழை—

## கோடிப்படையின்பெயர்.

தார்—

## படையறற்பெயர்.

கிழறுதல்— அறைபோதல்—

## மனிதர்பெயர்.

அ௪. மனிதர்-மநுவின் பிள்ளைகள். மக்கள்— நரர்-எல்லாவற்றையும் வசப்படுத்துதலுடையவர். மாக்கள்— மானவர் - மனுவின் பிள்ளைகள். மண்ணோர்-மண்ணுலகில் வசிப்பவர். ஆண்டையர் - ஆளுந்தன்மையுடையவர். மைந்தர் - வலிமையுடையவர். மனுடர், மானுடர் - மநுவின்பிள்ளைகள்.

## மக்கட்பரப்பின்பெயர்.

மன்பதை— பைஞ்ஞீல்—

## உடம்பின்பெயர்.

அ௫. உடல்— உறுப்பு-மேன்மையுடையது. அங்கம்-போதலுடையது. யாக்கை-தோல் முதலியவைகளால் யாக்கப்படுவது. உயிர்நிலை - உயிர் நிற்றலுடையது. தேகம் - அன்னாதிகளால் வளர்தலுடையது. காயம்-அவயவங்களாற் சேர்க்கப்பட்டது. சடலம் - அறிவில்லாதது. மூர்த்தம் - மயக்கஞ் செய்விப்பது. மெய்— தாவரம்-இயங்காமையுடையது. தனு-உணவினால் விசா

லிப்பது. ஆதாரம் - உயிர்க்காதாரமாயுள்ளது. கடம் - சீலையான் மூடப்படுவது. புதை- புணர்ப்பு-அவ்வயவங்களாற் புணர்க்கப்படுவது. காத்திரம் - போதலுடையது. பூட்சி-பூணுதலுடையது. ஆகம் - வளர்தலுடையது. பூதிகம்-மண் முதலிய பூதங்களாலாயது. சரீரம்-அழியுந்தன்மையுடையது. புற்கலம் - மேன்மையுடையது.

## வடிவின்பெயர்.

அ௬. வடிவம்— உருவம்— மேனி— சட்டகம்—

## பிணத்தின்பெயர்.

பிரேதம் - முடிவடைந்தது. சவம் - சீவனீங்கினது. களேவரம் - ஆதரிக்கப்படுவது. அழனம் - சுடப்படுவது.

## உடற்குறையின்பெயர்.

கவர்தம் - சிரசில்லாதது. மட்டை— யூபம் - யாகத்தூண்போல்வது.

## காலின்பெயர்.

அஎ. கால் - உடம்பிலே காற்பங்கான உறுப்பு. சரணம், பதம் - போதற்குக் காரணமானது. தாள் - முயற்சிக்குக் காரணமானது. அங்கிரி, பாதம், சலனம் - போதற்கருவி. கழல் - சுத்தி செய்யப்படுவது. அடி - நிலத்திலடுத்தலுடையது.

## கரட்டின்பெயர்.

பரடு—

## கணைக்காலின்பெயர்.

கணைக்கால் - திரண்டகால். சங்கம் - செனித்தலுடையது.

## முழந்தாளின்பெயர்.

முழந்தாள் - முழம் என்னும் அளவுடையகால். முழந்து - முழம் என்னும் அளவுடையது. சானு - தொடைக்குங் கணைக்காலுக்கும் நடுவுள்ளது.

## தொடையின்பெயர்.

அஅ. தொடை - தொடுக்கப்பட்டிருப்பது. ஊரு-சீலையான் மறைக்கப்படுவது. குறங்கு— வாமம் - அழகுடையது. கவான்—

## அல்குலின்பெயர்.

கடிதடம் - சீலையான் மூடப்படுவது. நிதம்பம் - மெலிதலுடையது.

## இடையின்பெயர்.

நடு - சரீரத்தினடுவிலுள்ளது. நுசுப்பு— மருங்கு— மத்திமம் - மெலிவுடையது. உக்கம்—

## மருங்கின்பக்கத்தின்பெயர்.

ஒக்கலை—

## வயிற்றின்பெயர்.

அ௯. உதரம் - கருப்பம் பிரகாசித்தலுடையது. மோடு - பெருமையுடையது. அகடு - உட்பக்கத்திலிருப்பது. குக்ஷி - மலத்தை வெளியில் விடுவது. பண்டி - பண்டங்கொள்வது.

## தேமலின்பெயர்.

திதலை— பொறி— துத்தி— சுணங்கு—

## கொப்பூழின்பெயர்.

இதலை— உந்தி - நீர்ச்சுழிபோல்வது. நாபி - கட்டப்படுவது. இலஞ்சி— போகில்—

## ஆண்குறியின்பெயர்.

கோசம்—

## பெண்குறியின்பெயர்.

பகம் - அடையப்படுவது.

## மார்பின்பெயர்.

௯0. அகலம் - விசாலமுடையது. மருமம்-இரகசியம் அடக்கிவைக்கப்படுவது. நெஞ்சு— ஆகம் - அகத்திலுள்ளது. உரம் - முன்செல்வது.

## முலையின்பெயர்.

நகிலம்— கொம்மை - திரட்சியுடையது. கொங்கை - பரிமளம் பொருந்துவது. குயம்-நகக்குறிபெறுவது. தனம்-குழந்தைகளாற் பாலுண்ணப்படுவது. குருக்கண் - பாரமுடையது. பயோதரம் - பாலைத்தரிப்பது. சுவர்க்கம் - விரும்பத்தக்கது. பறம்பு - மலையையொப்பது.

## முலைக்கண்ணின்பெயர்.

சிலீமுகம் - கூரிய நுதியுடையது. சூசுகம் - குழந்தைகளாற் பால்குடிக்கப்படுவது.

## கைத்தலத்தின்பெயர்.

௯௧. கரம் - தொழில்செய்தலுடையது. அத்தம் - முழமிடுதலுடையது. பாணி— தோள் - அடித்தலுடையது.

## முழங்கையின்பெயர்.

கூர்ப்பரம்-பொருளை இழுக்கும்போது சற்றே தோணிப்பது.

## மணிக்கட்டின்பெயர்.

மணிக்கட்டு - ஆபரணங்கட்டப்படுவது. கிலுத்தம்—

## உள்ளங்கையின்பெயர்.

அகங்கை - கையினுட்புறம். அங்கை - அகங்கை. குடங்கை - வளைவுடையது.

## விரலின்பெயர்.

விரல் - ஒன்றோடொன்று விரவுதலுடையது. அங்குலி - ஒன்றோடொன்று பொருந்துதலுடையது.

## நகத்தின்பெயர்.

நகம் - பரிசமறியாதது. உகிர் - விழுதலுடையது.

## தோளின்பெயர்.

கூஉ. புயம்— மொய்ம்பு - வலிமையுடையது. வாகு- முயற்சியுடையது.

## கழுத்தின்பெயர்.

கந்தரம் - தலையைத் தரித்திருப்பது. கிரீவம் - உண்ணற்குக் காரணமாயுள்ளது. களம் - விழுங்குதற்கருவி. கண்டம் - தொனித்தலுடையது.

## முதுகின்பெயர்.

புறம்-புறத்திலுள்ளது. வெரிந்— அபரம்-பின்னுள்ளது. வென்—

## பிடரின்பெயர்.

சிறுபுறம்— கயில்— எருத்தம்— சுவல்—

## தோண்மேலின்பெயர்.

கிகலம்—

## முகத்தின்பெயர்.

கூ௩. முகம் - உணவினாற் பீடிக்கப்படுவது. வதனம் - பேசுதற்கருவி. ஆனனம் - சீவித்தற்குக் காரணமானது. துண்டம் - உணவினாற் பீடிக்கப்படுவது. வத்திரம் - பேசுதற்கருவி.

## உதட்டின்பெயர்.

இதழ் - பூவிதழ் போல்வது. அதரம்— பாலிகை— முத்தம்-விடப்படுவது.

மேலுதட்டின்பெயர்.

ஓட்டம் - உட்டணத்தாற் சூடடைவது.

கீழுதட்டின்பெயர்.

அதரம் - கீழுள்ளது.

பல்லின்பெயர்.

எயிறு— தந்தம்-உணவுகளையுண்பது. தசனம்-கடித்தலுடையது.

௬௪. முறுவல்— மூரல்—

மோவாயின்பெயர்.

தாடி - வளைவுடையது. கட்டம்— சுவுகம் — தசையாலாக்கப்பட்டது.

நாக்கின்பெயர்.

நாக்கு-மேல்வாய்க்குங் கீழ்வாய்க்கும் நடுவிருப்பது. (நா - நடுவுள்ளது.) சிகுவை-இனியபொருளை விரும்புவது. தாரை— தாலு—

காதின்பெயர்.

கன்னம் - ஒலியைக்கிரகித்தலுடையது. அள் - கூர்மையுடையது. கேள்வி - கேட்டற்கருவி. செவி—

மிடற்றின்பெயர்.

௬௫. அணல்—

உண்ணாக்கின்பெயர்.

அண்ணம்—

மேல்வாய்ப்புறத்தின்பெயர்.

அணரி— அணல்— அண்ணம் - மேலுள்ளது.

கதுப்பின்பெயர்.

கவுள்— கபோலம் - உண்ணும்போது அசைதலுடையது. கொடிறு— அறு—

மூக்கின்பெயர்.

ஆக்கிராணம்-மணங்கிரகித்தற்குக் காரணமானது. கோணம் - மணத்தாற்பிரயிப்பது. துண்டம் - மணத்தைக் கிரகிப்பது. நாசி- ஒலிசெய்வது.

கண்ணின்பெயர்.

௬௬. நயனம், நேத்திரம் - வழியையடைவித்தலுடையது. அக்கம் - எங்கும்போய் வியாபித்தலுடையது. நாட்டம் - நாடுத

லுடையது. கோ - எங்கும்போய் வியாபித்தலுடையது. நோக்கம்-பார்த்தற்கருவி. சக்கு-பொருள்களைக் காட்டுவது. பார்வை - பார்த்தற்கருவி. தாரை - இருளைக்கடப்பது. விலோசனம் - பார்த்தற்கருவி. விழி— அக்கி - எங்கும்போய் வியாபித்தலுடையது. திருக்கு, திட்டி, திருட்டி - பார்த்தற்கருவி. அம்பகம் - எங்கும்போய் வியாபித்தலுடையது.

### கண்மணியின்பெயர்.

தாரை—

### கண்ணிமையின்பெயர்.

விளிம்பு—

### புருவத்தின்பெயர்.

கஎ. புருவம் - மேலே போதலுடையது. பிருகுடி - அசைவுடையது. நுதல்— பீரு - அசைவுடையது. புருரம், பூரு, புருடி - அசைவுடையது.

### நெற்றியின்பெயர்.

நிடலம் - முற்பக்கத்திலுள்ளது. நுதல்— குளம் - வளைவுள்ளது. இலாடம்-தலையின்மயிர் வரப்பெறுவது. மத்தகம் - கடினமுடையது. பாலம் - பிரகாசமுடையது. முண்டம் - மயிரில்லாதது. அளிகம் - அலங்கரிக்கப்படுவது.

### தலையின்பெயர்.

கஅ. தலை-பெருமையுடையது. மூர்த்தம் - மோகமடைவது. உவ்வி— உத்தமாங்கம் - உத்தமமான உறுப்பு. சிரம் - நரையாற் பீடிக்கப்படுவது. முடி - உடலினிறுதியிலுள்ளது. சென்னி— முண்டம் - மயிர்களையப்படுவது. சிகரம்— மத்தகம்—

### குடுமியின்பெயர்.

முடி— சிமிலி— சிக்கம்— சிகை—

### உச்சியின்பெயர்.

சுடிகை, சூழி - மூடப்படுவது. நவிரம்—

### ஆண்மயிரின்பெயர்.

கக. உளை— நவிர்— குடுமி— பித்தை— ஓரி— குழல்— கார்-கருமையுடையது. குஞ்சி - நெறிப்புடையது. தளை - கட்டப்படுவது. சிகை - தலையிற்கிடப்பது. தொங்கல்-தொங்குந் தன்மையது. பங்கி-பங்கமடைவது.

## ஆண்மயிர்க்கும் பெண்மயிர்க்கும்பெயர்.

குழல்— கதுப்பு— கேசம்— சுரியல்—

## பெண்மயிரின்பெயர்.

கூ00. குருள்-பாரமுடையது. குழல்— விலோதம்— ஓதி— கூழை— குந்தளம்— மராட்டம்— குரல்— ஐம்பால் - கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என்னும் ஐந்துவகையாக முடிக்கப்படுவது. ஐம்பால் என்பதற்கு இருட்சி, சுருட்சி, நீட்சி, குளிர்ச்சி, அழகு என்னும் ஐம்பகுதியது என்பாருமுளர். அளகம்-அலங்கரிக்கப்படுவது. கூந்தல்—

## மயிர்முடியின்பெயர்.

கொப்பு— முச்சி— பின்னகம்— கொண்டை— பந்தம், தம்மில்லம்-கட்டப்படுவது. சிகழிகை—

## பிறமயிரின்பெயர்.

கூ0க. ஓரி— கேசம் - தலையிற்கிடப்பது. பங்கி-பங்கமுடையது. உளை— உரோமம் - முளைத்தலுடையது. மராட்டம்—

## செறிமயிரின்பெயர்.

உரோமம்— சிரோந்தம்—

## மயிர்க்குழற்சியின்பெயர்.

குந்தளம்— விலோதம்—

## சடையின்பெயர்.

கூ0உ. சடை - ஒன்றோடொன்று நெருங்கியிருப்பது. குடிலம் - வளைதலுடையது. வேணி - கூடியிருப்பது. கோடீரம் - வளைதலுடையது. பின்னல் - பின்னுதலுடையது. சடிலம் - நெருங்கியிருப்பது.

## அவயவத்தின்பெயர்.

அவயவம்-சேர்ந்திருத்தலுடையது. காத்திரம்-போதலுடையது. உறுப்பு-உடம்பிலுறுதலுடையது.அங்கம்-போதலுடையது.

## சந்தின்பெயர்.

சந்து, மூட்டு, கொளுத்து—பொருத்தப்படுவது. கந்து - இணைக்கப்படுவது.

## நரம்பின்பெயர்.

கஎ௩. சிரை— சங்கனனம் - அவயவத்திற் சேர்ந்திருப்பது. நாடி-உள்ளே துளையுடையது.

## கழலையின்பெயர்.

அரலை—

## கோழையின்பெயர்.

கோழை - கொழுமையுடையது. ஐ— காசம்—

## உடற்றழும்பின்பெயர்.

அங்கிதம் - அடையாளமாக்கப்பட்டது. சேக்கை—
வசி— வடு—

## இறையின்பெயர்.

பொறி, வரை - எழுத்துப்போல்வது.

## நரையின்பெயர்.

நரை - வெண்மையுடையது. சரை - உடம்பின் முதிர்ச்சியைக் காட்டுவது. பலிதம் - அழகைக் கெடுப்பது.

## தலையோட்டின்பெயர்.

கஎச. கபாலம் - தலையைக் காப்பது.

## எலும்பின்பெயர்.

அத்தி - எறியப்படுவது. என்பு— களேவரம்-உடம்பிலே விசேடமுடையது.

## கழியுடலின்முழுவெலும்பின்பெயர்.

கங்காளம் - நீரைப் போக்குதலுடையது.

## இந்திரியத்தின்பெயர்.

இந்திரியம் - ஆன்மசம்பந்தமுடையது. பொறி—
கரணம் - செய்கைக்குக் கருவியானது. கந்தம்—

## உயிரின்பெயர்.

கஎரு. உயிர் - உயிர்த்தலுடையது. ஆதன்-போதலுடையது. சேதனன்-அறிவுடையது. பசு-பாசத்தாற் பீடிக்கப்படுவது. சீவன்-சீவித்தலுடையது. புற்கலன் - மேன்மையுடையது. கூத்தன் - கூத்தன்போல்வது. அணு - நுண்மையுடையது. இயமானன் - தலைமையுடையது. ஆன்மா - எங்கும் வியாபித்தலுடையது.